
செந்தமிழ் வளர்த்த சேரர்



ROJA MUTHIAH
KOTTAIYUR-623 106

கலைமகள் காரியாலயம், சென்னை-4

க. கோபால்,
5-ஆம் படிவம் 'C'

செந்தமிழ் வளர்த்த சேரர்

NO: 8632

ஆசிரியர்

வித்துவான் இ. மு. ஆறுமுக செட்டியார்

தலைமைத் தமிழாசிரியர்,
தியாகராயசெட்டி உயர்நிலைப்பள்ளி,
வண்ணாரப்பேட்டை, சென்னை.

க. எ. சம்மந்தமூர்த்தி செட்டி,
4, குருவப்ப செட்டி தோட்டம் சந்து,
தண்டையார்பேட்டை,
(போலீஸ் ஸ்டேஷன் அருகில்)
சென்னை-21.

கலைமகள் காரியாலயம்,
மயிலாப்பூர், சென்னை-4

உரிமை பதிவு] [அணா 14

ROJA. MUTHIAH
ARTIST
KOTTAIYUR P O
RAMNAD DIST.

முதற் பதிப்பு—மார்ச்சு, 1951.
இரண்டாம் பதிப்பு—ஜூன், 1953.

Approved by the Text Book Committee, Madras, for Class use. Vide page 120, Fort St. George Gazette, Part I B, Educational Supplement dated 19-5-1954.

PRINTED AT
THE MADRAS LAW JOURNAL PRESS,
MYLAPORE, MADRAS-4.

முகவுரை

இன்று மலையாள மொழி பரவியிருக்கும் நாடு ஒரு காலத்தில் தமிழ்நாட்டின் பகுதியாக இருந்தது. அதனைத் தமிழ் நூல்கள் சேரநாடு என்று கூறுகின்றன. சோழ பாண்டியரைப்போல் சேரமன்னரும் தமிழையும் தமிழ்ப் புலவர்களையும் தம் கண்ணேபோல் போற்றி வந்தனர். தமிழ் நாட்டின் புகழை வெளிநாடுகளில் பரப்பியதில் சேரரும் தக்க பங்கெடுத்துக்கொண்டனர். ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய நூல்கள் சேர வேந்தரின் ஆதரவால் சங்க காலத்தில் தோன்றின. எட்டுத் தொகை நூல்களில் காணப்படும் செய்யுட்களில் பல சேரரைப் பற்றியவை.

செந்தமிழ் வளர்த்த சேரர் என்னும் இப் புத்தகம் பதிற்றுப்பத்தினை ஆதாரமாகக் கொண்டு எழுதப் பெற்றது. சேரரைப்பற்றி வேறு நூல்களில் காணப்படும் சில செய்திகளும் ஆங்காங்கே சேர்த்துக் கொள்ளப் பெற்றுள்ளன. யானைக்கட்சேய் மாந்தரஞ் சேர லிரும்பொறையின் வரலாறும் கணைக்கா லிரும்பொறையின் வரலாறும் புறநானூற்றினை அடிப்படையாகக் கொண்டவை.

இச் சிறு புத்தகம் சங்க காலத்துத் தமிழ் நாட்டின் பண்பாட்டினை நன்கு விளக்குவதாகும்.

ஆசிரியன்.

பொருளடக்கம்

செந்தமிழ் வளர்த்த சேரர்

1. சேரநாட்டின் சிறப்பு

சேரர்: முடியுடை மூவேந்தராலும், அவருடைய கொடிகளின் கீழ் ஆண்ட சிற்றரசர்களாலும் செந்தமிழ் நாடு சிறப்பாக ஆளப்பட்டு வந்தது. சேர சோழ பாண்டியர் என்போர் முடியுடை மூவேந்தராவர். அவரவர் நாடு அவரவர் குடிப்பெயரால் வழங்கி வந்தது. மூவேந்தரும் ஒத்த சிறப்புடையரா யிருக்க எக்காரணம் பற்றியோ சேரரை முன்வைத்துக் கூறினர் முன்னோர். சேரர் தலைநகர் வஞ்சி; கொடி வில்; மாலை பனை; துறைமுகம் முசிறி. சேரர் அக்கினி குலத்தவரென்று பாரதம் கூறுகின்றது.

பழமை: சேரர் குலம் மிகப் பழமையானது. தங்கமெனப் போற்றப்படும் சங்கநூல்களில் சேரரைப் பற்றிய செய்திகள் பல இடங்களில் காணப்படுகின்றன. மகாபாரதம் சேரரைச் சிறப்பிக்கின்றது. வான்மீகி ராமாயணம் அவர்களை உயர்விக்கின்றது. அசோகர் கல்வெட்டில் சேரரைப் பற்றிய செய்தி காணப்படுகிறது.

சேரநாடு: திருவாங்கூர், கொச்சி, மைசூர் முதலிய சமஸ்தானங்களும், சேலம், கோயம்புத்தூர், நீலகிரி, மலையாளம் முதலிய மாவட்டங்களும் சேர்ந்த நிலப்பகுதி சேரநாடு என்று வழங்கப்பட்டது.

அளந்தறிய முடியாத இமயத்தின் மீதும் சேரரது விற்பொறி ஒரு காலத்தில் திகழ்ந்தது. சேர நாட்டின் ஒரு பகுதி இன்றைய மலையாளமாகும்.

வஞ்சி: சேரநாட்டின் தலைநகர் வஞ்சி. தாவர மாகிய வஞ்சி மலரும்; தலைநகராகிய வஞ்சி மலராது. அதனால் அதைப், "பூவாவஞ்சிப் பொன்னகர்" என்றனர் இளமையில் துறந்த இளங்கோவடிகள். வடமொழிவாணர், 'வஞ்சுளா ரணியம்' என்பர்.

அயிரைமலை: ஆனைமலைத் தொடர்களில் ஒன்று அயிரைமலை. இம்மலையில் போர்க்கடவுளாம் கொற்றவை கோயில் ஒன்றிருந்தது. அக் கொற்றவை சேரரது குலதெய்வம். அதற்குக் குருதியைப் பலிகொடுத்து, ஐம்பொறி யடக்கிச் சேரர் வணங்கினர். அயிரைமலை இக்காலத்தில் 'ஐவர்' மலை என்று வழங்கப்படுகிறது. கொற்ற வையின் வழிபாடு திரௌபதியின் வழிபாடாக மாறிற்று.

முசிறி: சோழருக்குக் காவிரிப்பூம்பட்டின மும், பாண்டியருக்குக் கொற்கையும் துறைமுகங் களாக இருந்தன. அவைபோலச் சேரருக்கு முசிறி துறைமுகமாக இருந்தது. ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்காவின் வடபகுதி முதலியவற்றிலுள்ள சில நாடுகளுடன் வாணிகம் நடத்த இத் துறைமுகம் ஏற்றதாக இருந்தது. அந் நாடுகள் பொன்னும் மணியும் கொடுத்துத் தம் நாடுகளுக்கு வேண்டிய பொருள்களைக் கொண்டு சென்றன. இக் காலத்துத் துறைமுகம் கொச்சி.

வாணிகம்: சேரரது விற்கொடி நிலத்தில் பறந்தது; நீரிலும் பறந்தது. அக் கொடியின் கட்டளையைப் பெற்றே அயல்நாட்டுக் கப்பல்கள் அங்கு வரும். வந்து, 'தகரம், ஈயம், மது வகைகள் முதலியவற்றைக் கொடுத்துவிட்டு அவற்றிற்கு ஈடாக மிளகு, யானைக்கொம்பு, வெற்றிலை, பட்டாடை, பஞ்சாடை முதலிய பொருள்களையும், குரங்கு, யானை முதலிய விலங்குகளையும், மயில், கிளி முதலிய பறவைகளையும் கொண்டு சென்றன. முசிறித் துறைமுகத்தில் எகிப்து நாட்டுக் கப்பல் களும், பிறநாட்டு நாவாய்களும் வந்து தங்கு கின்றன. முசிறி மிக்க வளமுள்ள நகர்' என்று பெரிப்ளூஸ் என்னும் பண்டைய நூல் பகர்கின்றது.

"யவனர்களால் செலுத்திவரப்பட்ட வேலைப் பாடு சிறந்த நல்ல மரக்கலங்கள், சுள்ளி என்னும் பெரியாற்றின் வெண்ணுரை கலங்கும்படி வந்து பொன்னைக் கொடுத்து மிளகினை வாங்கிக்கொண்டு போகும் வளம் பொருந்திய முசிறிப்பட்டினம்." (அகம், 149)

பெரியாறு: குடவனாறு, காஞ்சியாறு, பெரி யாறு முதலிய ஆறுகள் சேரநாட்டின் திருமேனி யைச் செழிக்கச் செய்கின்றன. அவற்றுள் மிகப் பெரியது பேரியாறு. அதனால் அதைப் 'பெரியாறு' என்றனர் பிற்காலத்தவர். இது சேரநாட்டிற் பிறந்து, அந் நாட்டிலே தவழ்ந்து விளையாடிச் சேர நாட்டு அரபிக் கடலிலேயே குளிக்கிறது. கோடைக் காலத்தில் கருமேகம் அங்குத் தன் பேரருளைப் பொழியும். அப்போது பெரியாற்றின் இருகரையும் புரண்டு பயனின்றிக் கருங்கடலில் வெண்ணுரை கலங்கக் கலந்துவிடும்.

கம்பம் என்னும் பள்ளத்தாக்கில் ஓர் அணை கட்டிப் பெரியாற்று நீரின் பெரும்பகுதியைத் திருப்பிச் செந்தமிழ் தவழ்ந்த வையையாற்றில் சேர்த்திருக்கின்றனர். சேரநாட்டுப் பெரியாறென்னும் பூங்கொடியை, பாண்டிய நாட்டு வையை என்னும் பொய்யாக் குலக்கொடி வரவேற்றாள். வரவேற்று, அப் பூங்கொடி விளையாடிக் களிக்கத் தன் திருமேனியையும் கொடுத்துவிட்டாள். இடத்தால் இருவரும் வேறு பட்டவராயினும் இனத்தால் ஒருவர்தாமே? புக்ககம் புகுந்த பெரியாறு தனக்கு இடந் தந்த பாண்டிய நாட்டிற்கு நன்றி காட்டும் முகத்தால் அந் நாட்டைச் செழிக்கச் செய்கிறது. அந்தப் பெரியாறு பாண்டிய நாட்டின் ஒரு பகுதியையும் சேரநாட்டின் ஒரு பகுதியையும் செழிக்கச் செய்கின்றது. முற்காலத்தில் பெரியாற்றினுக்குச் 'சுள்ளி' என்ற ஒரு பெயரும் வழங்கிற்று.

செந்தமிழ் மணிகள்: முற்காலத்தில் செந்தமிழ் செழித்தோங்கியது சேரநாட்டில். செந்தமிழ்ப் புலவர்கள் சேரமன்னர்க்கு உயிர். புலவர்களை அவர்கள் போற்றிய செயல் ஒரு புதுமை. சேரர் புவியரசராக மட்டும் விளங்கவில்லை. கவியரசராகவும் விளங்கினர். தகடூர் எறிந்த பெருஞ்சேரலிரும்பொறை என்னும் சேரமன்னன், அரிசில்கிழார் என்னும் அருந்தமிழ்ப் புலவர்க்குத் தன் அரசு முழுமையும் அளித்தான். செல்வக் கடுங்கோவாழியாதன் என்னும் சேரமன்னன், கபிலரென்னும் கன்னித் தமிழ்ப் புலவர்க்கு, நூறாயிரம் பொற்காசுடன், நன்றா என்னும் குன்றேறி நின்று தன் கண்ணிற் கண்ட நாடெல்லாம் காட்டிக்

'கொள்க' எனக் கொடுத்தான். சேரமன்னர்கள் புலவர்களைப் போற்றிய செயல், பதிற்றுப் பத்து என்னும் பழந்தமிழ் நூலாலும், பிற சான்றோர்கள் இயற்றிய சங்கநூல்களாலும் தெரிகின்றது. புலவர்களைத் தம் கண்ணெனக் காப்பதிலும், செந்தமிழ் மொழியைத் தம் உயிரென வளர்ப்பதிலும் சேர மன்னர்கள் போட்டி இட்டனர் என்று கூறுவது பொருந்தும்.

சேரர் குலக்கொழுந்தான இளங்கோவடிகள் ஒப்பற்ற சிலம்பொன்று செய்து தமிழ்த்தாயின் தாள்களில் இட்டார்; மகிழ்ந்தார். ஐயனரிதனர் பல வகை மலர்களால் கட்டிய வெண்பாமாலையைக் கழுத்திற் சூட்டினர்; களித்தார். கருவூர்த்தேவரும், வேணாட்டடிகளும் திருவிசைப்பாப் பாடி இசையைப் பரப்பினர்; பரவினர். சேரமான் பெருமாள் நாயனர் ஆதி உலாப் பாடித் தமிழணங்கை உலா வரச்செய்தார்; உவந்தார். அவரே அகவல், வெண்பா, கலித்துறை என்னும் மும்மணிகளாலாகிய மும்மணிக் கோவையையும் கழுத்திலிட்டார்; களிப்புற்றார். (கோவை-கோத்த மாலை.) குலசேகர ஆழ்வார் பெருமாள் திருமொழி இயற்றி மொழிக்கு மொழி சுவைக்கவைத்தார்; இன்புற்றார்.

வேறு சேரநாட்டு மன்னர்களும் புலவர்களும் தனித் தனி ஒப்பற்ற மலர்களைத் தமிழணங்கின் தாழ் கருங் கூந்தலிற் செருகிப் பூரித்தனர். தனிச் சிறப்புள்ள சங்கநூல்களிலும், வேறு பல உயர் நூல்களிலும் இன்றும் அவை வாடா மலர்களாய் மணங் கமழ்கின்றன. என்றும் அம் மலர்கள் கமழ்ந்துகொண்டே இருக்கும். ஏன்? அவை பொய்யடிமையற்ற புலவர்கள் இட்டவை.

மலையாள மொழி: தேனினும் இனிய செந்தமிழ் செழித்தோங்கிய சேரநாட்டில் மலையாளம் என்னும் மங்கை ஒருத்தி தோன்றினள். அவளும் தமிழ்த்தாய் ஈன்ற மங்கையருள் ஒருத்தி. நூல் வழக்கிலுள்ள தூய தமிழ்ச் சொற்களும், திரிந்த தமிழ்ச் சொற்களும், வடமொழிச் சொற்களும் சேர்ந்தது மலையாள மொழி. அம் மொழியின் பல எழுத்துக்கள் தமிழ் எழுத்துக்களைப் பெரும் பாலும் ஒத்திருக்கின்றன. தமிழில் பல சொற்கள் எப்பொருளில் வழங்குகின்றனவோ அச் சொற்கள் அப் பொருளில் மலையாள மொழியிலும் வழங்குகின்றன.

ஒரு மொழியோடு மற்றொரு மொழி ஒத்திருக்குமாயின், முன் தோன்றிய மொழியிலிருந்துதான் பின்னது தோன்றியிருக்கக்கூடும். தமிழ்மொழி பல்லாயிரம் ஆண்டுகட்கு முன் தோன்றியது. அதனால் அது முதுதமிழ் எனப்பட்டது. தமிழின் பழமைக்கு அதிலுள்ள இலக்கிய இலக்கணங்களே போதிய சான்றாம். மலையாளம் சில நூற்றாண்டுகட்கு முன் தோன்றிய புதுமொழி. அதில் பழைய இலக்கிய இலக்கணங்கள் இல்லை எனக் கூறுகின்றனர். இருப்பினும், 'இக்காலத்தில் புதிய இலக்கிய வளம் பெற்றுத் திகழ்கின்றது' என்று கூறுகின்றனர்.

பெருமை: சேரநாட்டில் யானைகள் அதிகம். அவை அடர்ந்த காடுகளிலும், நெருங்கிய மலைப் பக்கங்களிலும் கூட்டம் கூட்டமாக வாழும்; இளங் கொம்புகளை முரித்து உரித்துக் கன்றுகளுக்கு ஊட்டும். மதயானைகள் மிகுதியாக இருப்பதனால், 'வேழமுடைத்து மலைநாடு' என்கிறார் அருந்தமிழ் உணர்ந்த ஔவை. சேரநாட்டில் பல ஊர்களை

உடைய ஒரு பகுதிக்கு உம்பற்காடு என்று ஒரு பெயருண்டு. (உம்பல் - யானை.) யானைகள் மிகுதியாக இருப்பதால் அப் பெயர் பெற்றதுபோலும். பெருங் காடுகளில் செழித்து வளர்ந்துள்ள தேக்கு மரங்களை யானைகள் தூக்கிக்கொண்டு செல்லும்.

செழிப்பு: தேயிலைச் செடிகளும் மிளகுக் கொடிகளும் மிகுதியாகச் சேரநாட்டில் உண்டு. வாழையும், தெங்கும் அங்கு வாழ்வோர்க்குப் பெரும்பொருள். மிளகினையும் தேயிலையையும் மிகுந்த பொருள் கொடுத்து வெளிநாட்டார் தம் நாடுகளுக்குக் கொண்டுசெல்கின்றனர். அதனால் சேரநாட்டார்க்குச் செல்வச் செழிப்பு உண்டாகிறது. சென்னை இராச்சிய அரசாங்கத்திற்கும், மத்திய அரசாங்கத்திற்கும் பெரும்பொருள் கிடைக்கிறது. சேரநாட்டு யானைகள் இன்று வெளிநாடுகளுக்குக் காட்சிப்பொருள்களாகச் செல்கின்றன.

செந்தமிழ்நாட்டில் இத்துணைச் சிறப்பு வாய்ந்தது சேரநாடு.

2. உதியஞ்சேரல்

மன்னர் மாண்பு

ஆட்சி: முடியுடை மன்னர்களும், குறுநில மன்னர்களும் தமிழ் நாட்டை ஆண்டுவந்தனர். அவர்கட்கு எல்லா அதிகாரங்களும் இருந்தன. இருந்தும் அமைச்சர், புலவர், சான்றோர், படைத் தலைவர் முதலானோர் கூறுகின்றபடியே நாட்டை ஆண்டனர். அவர்கள் நாட்டிற்கு நன்மை செய்யவே ஆட்சியை ஏற்றுக்கொண்டனர் என்று வரலாற்றால் தெரிகிறது. ஒரு தாய்க்குப் பல குழந்தைகள் இருக்கின்றன. எல்லாக் குழந்தைக ளிடத்தும் அவளுக்கு அன்புண்டு. இருப்பினும் நோயுற்ற குழந்தையின்மீதே அவளது பேரன்பு செல்லும். அதுபோல் துன்புற்ற குடிகளிடத்தே நல்லரசர்களது பேரன்பு பெருகி ஓடிற்று.

தெய்வம்: நம் நாட்டு மன்னர்கள் வாழப் பிறந்தவர்களா? அன்றி ஆளப்பிறந்தவர்களா? அவர்கள் வாழவும் பிறக்கவில்லை; ஆளவும் பிறக்க வில்லை. நாட்டைத் தம் உயிரெனக் காக்கப் பிறந்த வர்கள். அவர்களது ஆட்சியின் பண்புகளை அறி வென்னும் உரைகல்லில் உரைத்துப் பார்த்தால் பத்தரை மாற்றுத் தங்கமெனத் தோன்றும். அத னால் மக்கள் அரசர்களை ஐம்பெருந் தெய்வங்களுள் ஒன்றாக வைத்துப் போற்றினர். 'திருவுடை மன்ன ரைக் காணில் திருமாலைக் கண்டேன்' என்றார் ஓர் ஆழ்வார்.

குடும்பம்: உயர்ந்த மன்னர்களுள் ஒருவன் உதியஞ்சேரல். அவனது கோப்பெருந்தேவி வேண்மாள் நல்லினி. அவளிடத்து உதியஞ்சேரலா தனுக்குப் பிறந்தவர்கள், நெடுஞ்சேரலாதனும்,

பல்யானைச் செல்கெழுகுட்டுவனுமாவர். நெடுஞ் சேரலாதன் மூத்தவன். பல்யானைச் செல்கெழு குட்டுவன் இளையவன்.

நாடு: உதியஞ்சேரல் ஆட்சிக்கு வந்தபோது சேரநாடு சிறு நாடாக இருந்தது. அது அவனுக் குப் பெருங் கவலை தந்தது. நாட்டைப் பெரிதாக்க அவன் பல திட்டங்களை வகுத்தான். அவனது பெரும் படை கிழக்கு நோக்கிச் சென்றது. சில நாட்களுக்குள் வங்கக் கடற்கரையில் அவனது வெற்றி முரசம் முழங்கிற்று. 'ஆங்கிலப் பேரரசில் சூரியன் மறைவதில்லை' என்று ஒரு மொழி தோன்றிற்று. அதுபோலன்றிச் சூரியன் உதியஞ் சேரலின் கடலிலே தோன்றி அவனது கடலிலேயே மறைந்தான்.

அருஞ்செயல்: உதியஞ்சேரல் நாட்டை விரி வாக்கியதோடன்றிச் செயற்கரிய செயலொன்று செய்தான். அச் செயல் தென்னாட்டிற்கு நன்மதிப் பைத் தந்தது. அதுதான் பாரதப் போரில் அவன் பெருஞ்சோ றளித்தது.

பெருஞ்சோ றளித்தல்

மன்னர்கள்: உதியஞ்சேரல் காலத்தில் பாண்டவர்க்கும் கௌரவர்க்கும் குருக்ஷேத்திரத் தில் பெரும் போர் மூண்டது. அது பாரதப்போர் எனப்படும். அக் காலத்தில் வடநாட்டு மன்னர் பாண்டவரையோ கௌரவரையோ சார்ந்து போரிற் கலந்துகொண்டனர். முடியுடை மூவேந் தரும், முடிதேடும் பாண்டவர்பக்கம் சேர்ந்து கொண்டனர். அக்குரன் என்னும் செந்தமிழ்ச் சிற்றரசன் கௌரவர் பக்கம் சேர்ந்தான். அவன் இடையெழு வள்ளல்களில் ஒருவனென்று சூடா

மணி நிகண்டு சொல்லுகிறது. வடநாட்டு மன்னரும், தென்னாட்டு வேந்தரும் பாரதப்போரில் ஈடு பட்டனர். எல்லோரும் போரில் ஈடுபட்டதால் போர் முடியும் காலம் வரை இரு படைக்கும் உணவளிப் பார் எவருமில்லை.

சிந்தனை: உதியஞ்சேரல் அதை அறிந்தான். 'ஒருவர் சார்பில் நின்று போர்புரிந்து உயிரை வாங்குவதை விட இரு படைகளுக்கும் உணவளித்து உயிரைக் காப்பதே பேரறமாகும். "உணவளிப்ப வரே உயிரளிப்பவராவர்" என்று பெரியோர் கூறுவர். அதனால் உணவளித்து உயிர்களைக் காக்க வேண்டும்' என்று உதியஞ்சேரல் எண்ணினன்.

ஏற்ற ஏற்பாடு: அரசன் அவ்வாறு தீர் மானித்தாலும், அவனது சிந்தனை அலைகள் ஒன்றன்பின் ஒன்ருகக் கிளம்பின. அருள் நிறைந்த உள்ளமும் அழியா ஒழுக்கமும் உள்ள அமைச்சரை அழைத்தான். நீண்ட நேரம் விவாதம் நடந்தது. பாண்டவர்க்கும் கௌரவர்க்கும் மறு நாள் இரு திருமுகம் அனுப்பினன் உதியஞ்சேரல். ஓலைகளில் எழுதிச் சுருள் செய்து மேலே மண்பூசி அவற்றின் மீது விற்பொறி பொறித்திருந்தன. தூதுவர் அவற்றைக் கொண்டு சென்றனர். இரு பெரும் படைகளுக்கும் பாரதப்போர் முடியும் வரை உணவளிப்பதாக அவற்றில் எழுதப்பட்டிருந்தன. சேர நாட்டில் எங்குப் பார்த்தாலும் ஒரே சுறு சுறுப்பு. குருக்ஷேத்திரம் செல்வதற்கு வழி காணப் பலர் விரைந்தனர். கிருஷ்ணை முதலிய ஆறுகளைக் கடப்பதற்குப் படகுகளை அமர்த்தப் பலர் ஓடினர்.

குடிகள் உணவுப் பொருள்களைக் கொண்டு வந்து குவியல் குவியலாகக் குவித்தனர். அவற்

றைக் கொண்டு செல்வதற்கு வண்டிகளும் பொதி மாடுகளும் கோவேறு கழுதைகளும் சென்றன. நூற்றுக் கணக்கான சமையற்காரர்களும், அரசனது கட்டளையை எதிர்நோக்கினர். 'எல்லாம் சரியாக இருக்கின்றனவா?' என்று உதியஞ்சேரல் உற்றுக் கவனித்தான்; குருக்ஷேத்திரத்திற்கு உணவுப்பொருள்களும் ஏவலாளரும் செல்லக் கண்ணுற் கட்டளை இட்டான்.

போர் மூண்டது: பாண்டவரும் கௌரவரும் படைத்துணையாக வருமாறு பல மன்னர்களை அழைத்தனர். அவர்களும் தாம் விரும்பிய கட்சிக்குப் படைத் துணையாகச் சென்றனர். குருக்ஷேத்திரத்தில் பாரதப்போர் மூண்டது. பலர் மாண்டனர்.

பெருஞ்சோ றளித்தான்: மாண்ட உயிர்கள் போக, ஆயுதங்கள் சுவை பார்த்து விழுப்புண் பெற்ற வீரர்களுக்கும், போரை எதிர் நோக்கிப் பாசறையில் இருக்கும் படைகளுக்கும் உதியஞ் சேரல் பெருஞ்சோ றளித்தான். அவனளித்த சிற்றுண்டியும் பேருண்டியும் அறுசுவை உள்ளவை. அவற்றில் அவன் இன்சொல்லேயும் புன்னகையையும் கலந்தளித்தான். உதியஞ் சேரலின் உள்ளத்தில் ஒரு பெருமிதம் முளைத்தது. ஏன்? ஐம்பத்தாறு தேசத்து அரசர்கட்கும், நால் வகைப் பெரும் படைக்கும் பேருணவளித்த பேறு பெற்ற னல்லவா அவன்? சிறிது மனக்குறைவும் அவனுக்கு இருந்தது. 'இந்தப் பாரதப்போர் பதினெட்டு நாட்களுக்குள் முடிந்துவிட்டதே! இன்னும் பல நாட்கள் நடக்கக் கூடாதா! நடந்தால் உண வளிக்கும் பேறு மேலும் கிடைக்குமே!' என்பதுதான் அந்த மனக்குறை.

அன்பிற்கு அளவுண்டோ?: உதியஞ்சேரல் செயற்கரிய இரு செயல்களைச் செய்தான். முதற் செயல் சேரநாட்டினை விரிவாக்கியது. இரண்டாஞ் செயல் பாரதநாட்டு வீரர் அனைவருக்கும் பெருஞ் சோறளித்தது. பசிப்பவர் யாராக இருப்பினும் என்? 'இல்லை' என்று யாசிப்பவர் யாராக இருப்பினும் என்? இல்லை என்னுமல் கொடுப்பதே முதலறமாகும். பகைவரென்றும் நண்பரென்றும் பாராமல் இரு பெரும் படைக்கும் பெருஞ் சோறளித்து அவன் அன்று முதல் பெருஞ் சோற் றுதியன் நெடுஞ்சேரலாதனுனன்.

செஞ்சிலுவைச் சங்கம்: என்றி டியூணண்ட் வேண்டுகோளால் 1864-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 22-ஆந் தேதி ஜெனிவாவில் பல நாட்டறிஞர் ஒன்றுகூடிச் செஞ்சிலுவைச் சங்கத்தை ஏற்படுத்தினர். அச் சங்கம் ஆல்போல் தழைத்து அறுகு போல் வேரூன்றி உலகெங்கும் ஓங்கியுள்ளது. என்றியை இன்றைய உலகம் போற்றுகின்றது. செஞ்சிலுவைச் சங்கம் தோன்றித் தொண்ணூறாண்டுகள் ஆகின்றன. அதன் கொள்கைகளுள் ஒன்று பாரதகாலத்துச் சேரன் உள்ளத்தில் மலர்ந்தது. அது மிகமிகப் பாராட்டற்குரியதன்றோ! அது பழந் தமிழரின் பண்பட்ட உள்ளத்தினைக் காட்டுகின்றது.

பாராட்டு: முரஞ்சியூர் முடிநாகராயர், இளங்கோவடிகள், மாமூலனர், கோட்டம்பலத்துத் துஞ்சிய சேரமான் முதலிய கவியரசரும் புவியரசரும் உதியஞ்சேரலின் பெருஞ்சோற் றுதவியைப் பாராட்டிப் பாடியுள்ளனர்.

"ஒன்றை ஈவார்மேல் நிற்கும் புகழ்."

3. நெடுஞ்சேரலாதன்

போர்ச் செயல்கள்

பிறப்பு: உதியஞ்சேரல் உலகை நன்முறையில் ஆண்டான். அவனுக்கு உறு துணையாக நின்றாள் வெளியன் வேண்மாள் நல்லினி. அவள் அவனது கோப்பெருந் தேவி. உதியஞ்சேரலின் அரச நீதியும், வேண்மாள் நல்லினியின் அறக் கற்பும் ஒரு குழந்தை உருவாகத் தோன்றின. அக் குழந்தைக்கு 'நெடுஞ்சேரலாதன்' என்று பெயரிட்டு, அவர்கள் பாரதப்போரில் பெருஞ் சோறிட்ட நாளினும் மிக மகிழ்ந்தனர்; கடமைகளைக் குறைவின்றிச் செய்தனர். நெடுஞ்சேரலாதன் எல்லாக் கலைகளிலும் மேன்மை யடைந்தான்; பெற்றோரைப் பெருந் தெய்வமாகப் போற்றினான். சேரநாட்டை அவனது சிறந்த தலைமேல் வைத்துப் பெற்றோர் செந்நெறி யடைந்தனர்.

இயல்பு: நெடுஞ்சேரலாதன் வீரத்தின் விளக்கு; கொடையின் கொழுந்து; நீதியின் கண்கள். அவனைக் கண்டு உலகம் வியந்தது. உலகைக் கண்டு அவன் உள்ளம் அருளால் மலர்ந்தது. அன்பு, அறம், நீதி இவற்றிற்கு அவன் நண்பன். பிணி, பசி, அநீதி இவற்றிற்குப் பகைவன்.

கடற்போர்: மேற்குக் கடலில் பல தீவுகள் உள்ளன. அவற்றுள் ஒன்றிற்கு அரசன் அடிக்கடி நெடுஞ்சேரலாதன் காலத்தில் பலர்க்குத் துன்பம் கொடுத்தான். சேரனது சிந்தனையை அது இழுத்தது. உடனே அவனுடன் அவன்

போர் தொடுக்கத் தீர்மானித்தான்; கடற்படைத் தலைவரை அழைத்துப் போர்க்கு ஆயத்தஞ் செய்யக் கட்டளை இட்டான். சில நாட்களுக்குள் சேரனது கடற்படை கப்பல்களில் விரைந்து தீவை அடைந்தது. போர்க் கப்பல்கள் கடலின் வயிற்றைக் கிழித்தோடின. 'போருக்கு வரவேண்டாம்' என்று தடுப்பதுபோன்று கிளம்பிய மலைபோன்ற அலைகள் துளிதுளியாகச் சிதறி ஓடின. போர் முரசொலியும், கருங்கடலொலியும் ஒன்று சேர்ந்ததால் ஓசையின் வேறுபாடு உணர முடியவில்லை.

கப்பலில் பறக்கும் விற்கொடி பகைவரைப் போருக்கழைத்தது. விற்கொடியைக் கண்டு பகைவன் போருக்கு வெகுண்டெழுந்தான். நெடுஞ் சேரலின் கடற்படை தீவின் நான்கு திக்குகளிலும் ஆவேசத்துடன் நுழைந்தது. பகையரசன் எதிர்த்தான். போர் கடுமையாக நடந்தது. பகைவர் படை, மத்தினல் கடையப்பட்ட தயிர்போலாயிற்று. அதைக் கண்ட பகைவன் விரைந்தோடிப் போய்க் கோட்டைக்குள் ஒளிந்துகொண்டான். நெடுஞ் சேரலாதன் கோட்டையை முற்றுகை இட்டான். கோட்டை வாயிலிலும் பல தலைகள் உருண்டன. உருண்ட தலைகளைச் சேரன் படை பொறுக்கி அதனல் கோட்டைக் கதவுகளை அடித்து உடைக்க முயன்றது. சிலர் கதாயுதத்தினல் கதவுகளை உடைத்தனர். கதவுகள் தவிடுபொடி யாயின. உள்ளே நுழைந்தான் நெடுஞ்சேரலாதன்.

கோட்டைக்குள்ளே ஒரு கடப்ப மரம் இருந்தது. அது காவல் மரம் எனப்படும். அத் தீவின் அரசன் அதைத் தெய்வம்போல் போற்றிவந்தான். பண்டைக்காலத்தில் தென்னுட்டு வேந்தர்கள் ஒவ்

வொருவரும் ஒருவகை மரத்தைக் காவல் மரமாகக் கொண்டு அதைக் காவல் காத்துப் போற்றி வந்தனர். அம் மரம் தங்கள் மரபையும் நாட்டையும் காத்து வருவதாகக் கருதினர். இத்தகைய மரங்கள் காவல்மரம் எனப்படும். ஓரரசன் தன் பகைவனை வெல்லுங்கால் அப் பகைவனது காவல் மரத்தை அழிப்பதை முதற் கடமையாகக் கொண்டான். அதனை அழித்து வீர முரச மாக்கிக் கொள்வான். அன்றி அடுப்பெரிக்க விறகாகப் பயன்படுத்துவான். தன் யானையை அதிற் பிணிப்பான். இச் செயல்கள் பகைவர்க்குப் பேரவமானத்தைத் தருவன என்று தமிழ் மன்னர் கருதி வந்தனர்.

நிற்க; கோட்டைக்குட் சென்ற நெடுஞ்சேரலாதன் அம் மரத்தை வெட்ட முயன்றான். அதை வாளேந்திய வீரர் பலர் காத்து நின்றனர். அவர்கள் மேல் சேரன் அம்பு மழை பொழிந்தான். காற்றிற்பட்ட பஞ்சுபோல் பகைவர் படை பறந்தது. தீவினது அரசன் வெகுண்டு போருக்குச் சென்றான். இருவருக்கும் போர் மூண்டது. பகையரசனை நெடுஞ்சேரலாதன் வென்றான். வென்று பகைவனது காவல் மரமாகிய கடம்பினை வெட்டிப் பெரிய முரசொன்று செய்தான்.

கடம்பினைக் காவல்மரமாகக் கொண்டு ஆட்சி புரிந்தவன் கதம்ப மன்னனாகத் தெரிகிறது. அவன் மைசூர் நாட்டின் மேற்பகுதியையும், சேரன் கைப் பற்றிய தீவொன்றினையும் ஆண்டான் என்று தெரிகிறது.

வீரர்க்கு உதவி: கடல் தீவில் விற்கொடியைப் பறக்கவிட்டுச் சேரனும் வீரரும் வஞ்சியை

யடைந்தனர். போரில் இறந்தோரின் மனைவி மக்களுக்குச் சேரலாதன் பெரும் பொருள் கொடுத்து உதவினான்; புண்பட்ட வீரரை நேரிற் கண்டு இன்சொற் கூறி ஏற்றதைச் செய்தான். வெற்றிக்கு முதற் காரணமாக இருந்த வீரர்க்குக் காவிதி, ஏனாதி முதலிய பட்டங்களை வழங்கினான். வீரரது உள்ளம் மலர்ந்து கடல்போல் விரிந்தது.

வடநாட்டுப் போர்: ஆரிய மன்னர் பலர் செருக்குற்றிருந்தனர். செருக்கென்னும் முட்புதருக்குத் தீ வைக்க ஏற்ற காலத்தை எதிர்நோக்கினான் நெடுஞ்சேரலாதன். குடிகளுக்குப் போர்ப் பயிற்சி அளித்துப் படைகளைப் பெருக்கினான். வகை வகையான ஆயுதங்கள் போர் போராகக் குவிந்தன. வடநாட்டுப் போருக்குத் தென்னாட்டில் போர் முரசம் முழங்கிற்று. சேரநாட்டுப் படைக் கடல் வடநாட்டிற் புகுந்தது. மதயானைகளுக்கு முன் அரச யானை செல்வதுபோல், நெடுஞ்சேரலாதன் படைக்கு முன் சென்றான். அரசன் படைகளுக்கு முன் நின்று போர் செய்வது பழங்காலத்து முறை.

வடநாட்டு மன்னர் சிலர் எதிர்த்தனர்; எதிர்த்துத் தோற்றனர்; மாண்டனர். சிலர் திறை கொடுத்து அடி பணிந்து உயிர் வாழ்ந்தனர்.

நெடுஞ்சேரலாதன் இமயத்தை எட்டிப் பிடித்தான். அதை வெள்ளிமலை, பொன்மலை, கைலைமலை என்று கூறுவர். அங்கிருக்கும் ஆரிய மன்னர் கட்டளையால் முருக்கென்னும் முள்ளுடைய மரமும் கவரி மான் மயிர்களுக்குத் துன்பஞ் செய்யாது. அதனால் அம் மரங்கள் நிறைந்த இமயத்தில் கவரி

மான்கள் இனிதாக உறங்கும். விலங்குகளாலும் மக்களாலும் வருத்தமின்றிப் பகற்காலத்தில் தாம் நீருண்ட அருவியையும் நரந்தம்புல்லையும் அக் கவரி மான்கள் கனவிலும் காணும்.

திரிபுர மெரித்த விரிசடைக் கடவுளும், முற்று முணர்ந்த முனிவரும், எண்வகைச் சித்துக்களை யுடைய யோகியரும் எழுந்தருளிய அழகு வழியும் மலை அது. அதனால் நெடுஞ்சேரலாதன் முதலில் அதை வணங்கினான். பின் தன் முத்திரையாகிய வளைந்த வில்லை அந்த இமயத்தில் பொறித்து அன்றுமுதல் இமய வரம்பன் நெடுஞ்சேரலாத னான். ஒரு நாட்டை வெல்வோர் அந் நாட்டிற்கு எல்லையாகவுள்ள மலையில் தம் முத்திரையைப் பொறித்தல் தமிழர் மரபு. இமயவரம்பன் என்பது இமயமலையைத் தன் நாட்டிற்கு எல்லையாக வுடைய வன் என்னும் பொருளைத் தரும். பொற்கோட்டு இமயமும், பொதியமும்போல் அவன் தன் வீரப் புகழை அங்கும் நிலைநிறுத்தினான்.

ஆரிய மன்னர் சிலர் வீரியம் குன்றிச் சேரனை வணங்கிப் பெருமை மிக்க அணிகளையும் பொன் னாற் செய்த பாவைகளையும் ஒளிவிடும் வைரங் களையும் திறையாகக் கொடுத்தனர். மாந்தை என்னும் நகரிலுள்ள தனது அரண்மனையில் அப் பொருள்களைக் கொண்டுவந்து குவித்தான் நெடுஞ் சேரலாதன்.

யவனர் போர்: நச்சினார்க்கினியரும் சிலப் பதிகார அரும்பத உரையாசிரியரும் 'யவனர்' என் பதற்குச் 'சோனகர்' என்று பொருள் கூறுகின்ற னர். சேந்தன் திவாகரம் 'சோனகர் யவனர்'

என்று சொல்கின்றது. ஐம்பத்தாறு தேசங்களில் ஒன்று சோனகம். சீனவிலிருப்பவரைச் சீனர் என்பதுபோல் சோனகத்தில் இருந்தவரைச் சோனகர் என்றனர். சோனகம், பாரதநாட்டின் மேற்கிலுள்ள நாடுகளுள் ஒன்று. கிரேக்கு, எகிப்து, அரேபியா முதலிய நாடுகள் பாரத நாட்டின் மேற்கிலுள்ளன. அவற்றில் இருந்தவர் களை யவனரென்று கூறி இருக்கலாம். மேற் குறித்த நாடுகளுள் யாதோ ஒரு நாட்டின்மீது இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் போர்புரிந்தான். யவனர் என்பதற்கு, 'துருக்கர், யவனர்' என்று பொருள் கூறுகின்றார் அடியார்க்கு நல்லார்.

யவனர்கள் மது, கண்டுசருக்கரை முதலான பொருள்களைக் கொண்டுவந்து நம் நாட்டில் விற்றனர். அவர்கள் தமிழ் நாட்டில் சிறந்த தொழி லாளராகவும், தமிழ் மன்னரிடம் வாயிற்காவலராக வும் இருந்தனர். எனவே, தமிழ் நாட்டிற்கும், யவனர் நாட்டிற்கும் தொடர்பு இருந்ததென்று தெரிகிறது.

யவன மன்னர்கள் சேரநாட்டைத் தாக்கத் திட்டமிட்டனர். அதை ஒற்றர் மூலமாக அறிந்தான் நெடுஞ்சேரலாதன். அவனா அதைப் பொறுப்பான்! அவனுக்குச் சினம் பொங்கி எழுந்தது; கண்கள் சிவந்து தோன்றின. போர்முரசு முழங்கிற்று. நெடுஞ்சேரலாதன் படைகளோடு போருக்குப் புறப்பட்டான். இரு படைக்கும் போர் மூண்டது. யவனர் படைகள் இருந்த இடம் தெரியாமல் சிதறின. சேரலாதன் வெற்றி முரசு முழங்கிற்று. 'வன்சொல் யவனர் வளநா டாண்டு' என்று சிலப் பதிகாரம் சொல்வதால் யவனர் நாட்டிலும் விற்

கொடி பறந்ததென்று தெரிகிறது. தமிழ் மரபில் தோன்றியவன் நெடுஞ்சேரலாதன் அல்லனா? அதனால், 'தோற்ற அரசரைக் கொல்வது அற மன்று' என்று அவர்களைப் பின் கட்டாகக் கட்டி, அவர்கள் தலைகளில் நெய்யைப் பெய்தான். தோற்ற அரசர்கள் தலையில் நெய்யைப் பெய்வது அக் கால மன்னரது வழக்கம்.

யவனர் திறை கொடுத்துச் சேரனை வணங்கினர். அவர்கள் திறையாகக் கொடுத்த பெரும் பொருளை அவன் தன் நாட்டிற்குக் கொண்டு சென்றான்; பாவலர்க்கும் பாணர்க்கும் படைகளுக்கும் ஏழைகளுக்கும் தன் வன்கை சிவக்க வாரி வாரிக் கொடுத்தான்; அவர்கள் இன்முகங்களைக் கண்டு மகிழ்ந்தான்.

நல்லியல்பு

ஏழைகளுக் குதவி: பசியால் வருந்திய ஏழைகள் நெடுஞ்சேரலாதனை வணங்கினர். அவர்களைக் கண்டவுடன் அவனது நெஞ்சம் உருகிற்று. அவர்கட்கு வெண்ணெற் சோறு அவன் உண்ணக் கொடுத்தான். நீரில் நனைந்த பருந்தின் சிறகு போன்ற கந்தை உடைகளைக் களையச் செய்து பட்டாடைகளை உடுக்கக் கொடுத்தான்; பெண்கள் அணிய நகைகள் கொடுத்தான். வீரரைக் கண்டு இரங்காத அவனது நெஞ்சம் ஏழைகளைக் கண்டு இரங்கிற்று. சூரியனைக் கண்டு மலராத அல்லி சந்திரனைக் கண்டு மலரும்.

காடு நாடாயிற்று: நெடுஞ்சேரலாதன் இருள் சூழ்ந்த பெருங் காடுகளை வெட்டித் திருக் கோயில்கள் கட்டினான்; ஒளி பாயும் சிறு காடுகளை

ROJA MUTHIAH
42, HOSPITAL STREET

வெட்டி வீடுகள் கட்டி வீரர்கள் தம் மனைவியரோடு வாழச் செய்தான். வழிச் செல்வோரைத் துன்புறுத்தி வாழ்வோராகிய ஆறலை கள்வரைக் கொன்று அவர்களிருந்த இடங்களைக் கடவுளரும் வீரரும் வாழும் இடமாகச் செய்தான்.

கோயிற்பணி: உயிர்களுக்குக் குறைவின்றிக் கொடுத்ததால் நெடுஞ்சேரலாதன் கைகள் சிவந்தன. சிவந்த கைகளால் கோவில்களுக்கு உயர்ந்த நகைகளை வாரி வாரிக் கொடுத்தான். மகிழ்ச்சி தரும் திருவிழாக்களுக்கும் அவன் நிரம்பக் கொடுத்தான்.

பரிசு: இமயவரம்பன் மீது குமட்டூர்க் கண்ணனார் என்னும் புலவர் பதிற்றுப் பத்தின் இரண்டாம் பத்தைப் பாடினார். நெடுஞ்சேரலாதன் செவியாரக் கேட்டு மகிழ்ந்தான்; இன்பக் கடலுள் மூழ்கினான்; புலவரைப் பாராட்டிப் பேசினான்; உம்பற்காடு என்னும் நாட்டினைச் சேர்ந்த ஐஞ்ஞூறு ஊரும், முப்பத்தெட்டு ஆண்டு தென்னாட்டு வருவாயில் பாகமும் பரிசிலாகக் கொடுத்தான். அவ்வளவு கொடுத்தும், 'அளவில்லாத தமிழுக்கு ஓர் அளவுள்ள பொருளா பரிசில்!' என்று நினைத்தான் நெடுஞ்சேரலாதன்.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் ஐம்பத்தெட்டு ஆண்டு ஆட்சிபுரிந்தான்.

4. பல்யானைச் செல்கெழு குட்டுவன்

ஒரு நாளில் இருகடல் நீர்

பண்பட்ட உள்ளம்: இமயவரம்பன் நெடுஞ் சேரலாதனுக்குப் பின் பல்யானைச் செல்கெழு குட்டுவன் சேரநாட்டுக்குச் செங்கோலேந்தினான். அவனது தந்தை, உதியஞ்சேரலாதன்; தாய், வெளியன் வேண்மாள் நல்லினி. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்குத் தம்பி. பல்யானைச் செல் கெழுகுட்டுவன் அரசியலைத் தாங்கிய போதிலும் புளியம் பழமும் ஓடும் போல் பற்றற்று ஆட்சி புரிந்தான். அவனை இராச இருடி என்று கூறலாம். அவன் வீரனும் ஞானியுமாக விளங்கினான். சான்றோர் நட்பும் அருளுள்ளமும் அவனுக்கு மிக் கிருந்தன. அவனது உதவியைப் பெறுதற்குத் துன்புற்றோர் வந்த வண்ணமா யிருந்தனர்.

கடல் நீராடல்: செல்கெழு குட்டுவனுக்குப் பெரியோர் கூறிய புண்ணிய தீர்த்தங்களில் திண்ணிய நம்பிக்கை இருந்தது. இரு கடல் நீரும் ஒரு பகல் ஆட எண்ணினான். அதனால் மேல் கடலி லிருந்து கீழ் கடல்வரை மதயானைகளை நிறுத்தினான். அவற்றின் மூலம் இரு கடல் நீரையும் கொண்டுவர ஏவலாளரும் சென்றனர். ஒரு பெரு யானை மீது அலைகடல் நீர் வரும். அந் நீர் மற்றொரு யானைமீது மாற்றப்படும். இவ்வாறு இரு கடல் நீரும் மங்கல வாத்திய முழக்கோடு சேரநாட்டை யடைந்தது.

முரசம் முழங்க, வெண்சங்கம் ஊத, வாத்தியங் கள் ஒலிக்க, சான்றோர் வாழ்த்த, புலவர் புகழ, பாணர் பாடப் பல்யானைச் செல்கெழு குட்டுவன் இரு கடல் நீரும் ஒரு பக லாடினான்.

நாட்டைப் பங்கிட்டான்: பரந்த அறிவும், நிறைந்த ஒழுக்கமுமுள்ள சான்றோரைத் தன்னிடம் சேர்த்துக்கொண்டான். அச் சான்றோர்க்கு அருள் முதலிய பண்புகள் அனைத்தும் இருந்தன. பொருள் மட்டும் இல்லை. அந்த வறுமை நிலையைக் குறிப்பால் உணர்ந்தான் செல்கெழுகுட்டுவன். அவர்கட்குத் தன் நாட்டைப் பங்கிட்டுக் கொடுத்தான். சான்றோர் அதைக் கொள்ள மறுத்தனர். அரசனது வேண்டுகோளால் அவர்கள் அதைப் பின்னர் ஏற்றுக்கொண்டனர்.

கொற்றவை வழிபாடு: அயிரை மலையில் எழுந்தருளிய தெய்வக்கொற்றவை சேரர்க்குக் குல தெய்வம். அவளைச் சேரர் பலர் வணங்கியதாகப் பதிற்றுப் பத்தில் பல இடங்களில் பார்க்கலாம். பல்யானைச் செல்கெழுகுட்டுவனும் தன் முன்னோர் போலக் கொற்றவையை வணங்கினான். ஆனந்தக் கண்ணீர் பெருக, உள்ளம் உருக, ஐம்பொறியடங்க, அவளது அருமலர் அடிகளில் சிந்தையைச் செலுத்தி உலகையும் தன்னையும் மறந்து நின்றான்.

புலவர்க்குப் பரிசு: பாலைக் கௌதமனார் என்னும் புலவர், பல்யானைச் செல்கெழுகுட்டுவன் மீது பதிற்றுப்பத்தின் மூன்றும் பத்தைப் பாடினார். அதன் சொல்லழகும் பொருள் நயமும் அரசனது உள்ளத்தைக் கொள்ளைகொண்டன. அவன் இன்ப வாரிதியில் மூழ்கி, 'தமிழ்ப்பாடல் என்று சொல்லிச் செந்தேன் தந்த புலவரே, நீங்கள் வேண்டியதைப் பெற்றுக் கொண்மின்' என்று உள்ளன்போடு உரைத்தான். அச் சொல்லில் அன்பு கனிந்திருந்தது.

புலவரது உள்ளம் இவ்வுலகப் பொருளை விரும்பவில்லை. அவை யனைத்தும் நிலையுடையன அல்ல. அதனால் அவர் அரசனை நோக்கி, "சான்றோர் அறவுரைத் தேரில் ஒழுக்க வழியிற் செல்லும் அரசே, நானும் என் பார்ப்பனியும் சுவர்க்கம் புகவேண்டும்" என்றார்.

நான்மறை ஓதி நல்வழியிற் செல்லும் அந்தணரில் சிறந்தோரை அழைத்து அதற்கேற்ற வழியை ஆராய்ந்தான் பல்யானைச் செல்கெழுகுட்டுவன். அவர்கள், "பத்துப் பெருவேள்வி செய்தால் பாலைக் கௌதமனும் அவரது பத்தினியும் சுவர்க்கம் புகுவர்" என்றனர்.

அவ்வாறே அரசன் பத்துப் பெருவேள்வி செய்யக் கட்டளை இட்டான். ஒன்பது பெருவேள்விகள் உயர்வு சிறப்போடு முடிந்தன. பத்தாம் பெருவேள்வி நடந்துகொண்டிருக்கையில் பாலைக் கௌதமனும் அவருடைய பத்தினியும் இன்பச் சுவர்க்கம் ஏகினர். அங்கிருந்த அரசன், அமைச்சர், சான்றோர், மற்றுமுள்ளோர் அதிசயித்தனர்.

பராசரன் பரிசு: அச் செய்தி திங்களின் கதிர்போல் எங்கும் பரவிற்று. சோணாட்டிலிருந்த பராசரனுக்கும் அச் செய்தி சென்றது. அதற்கு முன்னமே சேரனது வேறு நல்லியல்புகளை அவன் கேள்வியுற்றிருந்தான். அதனால், 'சேரனைக் கண்டு, புலமையைக் காட்டிப் பரிசு பெற்று வறுமையைத் தீய்க்க வேண்டும்' என்று எண்ணினான். எண்ணிச் செல்கெழுகுட்டுவனைக் காணப் புறப்பட்டான்.

நாடும் காடும், மலையும் சுரமும் கடந்து தமிழ் முனிவனது பொதியத்தைக் கண்டு, தலைவணங்கிச்

சேர நாட்டையடைந்து, பல்யானைச் செல்கெழு குட்டுவனைக் கண்டான். அரசன் அவனுக்கு இருக்கை யளித்தான். அங்கிருந்த புலவர்களுக்கும் பராசரனுக்கும் தருக்கம் நடந்தது. அதில் பரா சரன் வெற்றியடைந்தான். அத் தருக்கம் அனை வருக்கும் இன்பமளித்தது. பராசரனது புலமையை வியந்து செல்கெழுகுட்டுவன் அவனுக்குப் பெரும் பரிசளித்தான். பரிசு பெற்ற புலவன், "அயிரை மலை போலவும், பெரியாற்றினைப் போலவும் வாழ்க" என்று அரசனை வாழ்த்திச் சென்றான்.

துறவு: பல்யானைச் செல்கெழுகுட்டுவனது புரோகிதர் நெடும் பாரதாயனர். அவர் ஒடுங்காப் புகழும் உயர்ந்த கேள்வியும் உடையவர். அவர் இல்வாழ்க்கையை வெறுத்து மெய்த் துறவை மேற் கொண்டு, கடுந் தவம் செய்ய முன்னமே சென்றார். அது கண்டு பல்யானைச் செல்கெழுகுட்டுவனுக்கும் துறவுள்ளம் பிறந்தது.

'இந்த உடல் விண்ணில் எறிந்த மட்குடம் போன்றது. பரம்பரையாய் வரும் இந்த அரசு வண்டிச் சக்கரம் போன்றது. நிலையற்ற உடலையும், பகைவர் கை மாறும் அரசையும் நம்பி இருத்தல் வீண்' என்று அரசைத் துறந்தான். 'இனிது இனிது ஏகாந்தம் இனிது' என்று தனித்திருந்து, தவத்தை மேற்கொண்டு தனக்கு உறுதி தேடினான். அவன் அன்பின் கொழுந்தாகி அருளுக்கு இருப் பிடமானான்.

இமயவரம்பன் தம்பி பல்யானைச் செல்கெழு குட்டுவன் இருபத்தைந் தாண்டு நல்லாட்சி புரிந்தான்.

5. களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல்

நன்னனுடன் முதற் போர்

பிறப்பு: பல் யானைச் செல்கெழு குட்டுவன் அரசைத் துறந்து அருந்தவஞ் செய்யச் சென்றான். அதன் பின் அவனுடைய அண்ணன் மகன் களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல் அரசனானான். அண்ணன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன். இமயவரம்பனுக்கு இரு மனைவியர் இரு கண்கள் போல் இருந்தனர். கண்கள் இரண்டாயினும் ஒரு பொருளைத்தானே நோக்கும்? அதுபோல அவனுக்கு மனைவியர் இருவராயினும் கருத்தில் ஒருவரே! ஒரு மனைவி சோழன் மணக்கிள்ளியின் மகள் நற்சோணை. மற்றொரு மனைவி வேளாவிக் கோமான் மகள் பதுமன்தேவி. நெடுஞ்சேரலாதனுக்குப் பதுமன்தேவியினிடம் பிறந்த மக்கள் களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலும், ஆடு கோட்பாட்டுச் சேரலாதனுமாவர்.

முடிசூட்டு விழா: நார்முடிச்சேரல் மூத்தவன். அவனுக்குப் பொன்முடி சூட்டி, அரியணை ஏற்றிக் கண்டு களிக்க நாள் குறித்தனர். மன்றங்களிலும் தெருக்களிலும் பழ மணல் நீக்கிப் புது மணல் பரப்பினர்; திண்ணைகளில் பூரண கும்பம் வைத்துப் பாவை விளக் கேற்றினர். அரண்மனையும் நாடும் நன்கு அலங்கரிக்கப்பட்டன. ஏழைகள் பொருள் பெற்று மகிழ்ந்தனர்.

அந் நாட்டுக் குடிகளும் குடிகளிற் சிறந்த சான்றோரும் வேற்று நாட்டு மன்னரும் குழுமினர். அலங்கரிக்கப்பட்ட அரியாசனத்தில் நார்முடிச் சேரல் அமர்ந்திருந்தான். அவனுக்குச் சூட்டுதற்

குரிய பொன்முடியையும் மாலையையும் காணவில்லை. திடுக்கிட்டனர்; திகைத்தனர். ஏன்? அவன் சூட்டுதற்குரிய கண்ணியையும் முடியையும் பகைவர் கவர்ந்து சென்றனர். எல்லாம் நிகழ்ந்த பின் முடிசூட்டு விழாவைத் தள்ளி வைக்க முடியுமா? அதனல் களங்காயால் கண்ணி (மாலை)யும், நாரால் முடியுஞ் செய்து அவனுக்குச் சூட்டினர்.

அன்று முதல் அவன் களங்காய்க்கண்ணி நார் முடிச் சேரல் என்று அழைக்கப்பட்டான். அவனது இயற் பெயர் யாதோ! அது ஏனே மறைந்து போயிற்று! சிலந்திக் கூடுபோல் நாரால் முடி ஒன்று செய்து நார் முடியின் தாழ்வு நீங்க முத்து மாலைகளைக் கோத்து விளிம்பில் மணிகளைப் பதித்தனர். அந்த முடிதான் சேரனுக்குச் சூட்டப்பட்டது. அது உலகத்தில் நிகழாத புதுமை! அவன் நார்முடி சூடி, நார் (அன்பு) உடையவனுன்.

நன்னன்: நன்னன் என்பவன் வேளிர்களுள் ஒருவன். அவன், தன் காலத்து வேளிர் பலர்க்குத் தலைவனுக இருந்தான். கடம்பின் பெருவாயில் என்ற நாட்டிற்கு வேந்தன்; 'மலைபடு கடாம்' என்னும் பாட்டின் தலைவன். பெருங் கௌசிகனுர் என்னும் புலவர் பெருமானுர் அவனது கொடை, அருள், செங்கோல், குடியோம்பல் முதலியவற்றின் சிறப்பை இதில் சித்திரித்துக் காட்டுகின்ருர்.

அவன் சிற்றரசனுயினும் பேரரசனும் நார் முடிச் சேரலோடு போரிடத் துணிந்தான். வரிப்புலி சிறிதாயினும் பெரிய யானையோடு போரிடத் துணியுமன்ருே? நன்னன், சேரனுக்கு உரியதாக

இருந்த பூழி நாட்டைத் தாக்கி அழித்தான். நார்முடிச் சேரலும் எதிர்த்துத் தாக்கினன். வெற்றியும் தோல்வியும் சக்கரம்போல் சுழன்றன. முடிவில் வெற்றி நன்னனை யடைந்தது. பெற்ற வெற்றியே போதுமென்று அவன் பூழி நாட்டோடு நின்று விட்டான்.

சேரர்க்குப் பரம்பரைச் சொத்தான பூழி நாடு நன்னனுக்குச் சொந்தமானதைக் குறித்து நார்முடிச் சேரல் நாணினன்; பெருந் துயருற்றான். வீரப் பொலிவுற்ற முகம், வாடிய மலர்போல் காணப்பட்டது. இவ்வாறு சில நாட்கள் ஓடின. 'சென்றதைப்பற்றி வருந்திக்கொண் டிருப்பதால் சென்றது வருமா? சென்றது வருவதற்கான வழியைத் தேட வேண்டும்' என்று அவனது இருண்ட உள்ளத்தில் ஓர் ஒளி தோன்றிற்று.

இரண்டாம் போர்

போர் முயற்சி: அமைச்சரையும் படைத் தலைவரையும் அழைத்து மந்திராலோசனை செய்தான் நார்முடிச் சேரல். அடுத்த நாள் முதல் குடிகளுக்குக் கட்டாயப் போர்ப் பயிற்சி அளிக்கப் பட்டது. பல தொழிற்சாலைகளை உண்டாக்கிப் புதுப் புது வகையான போர்க் கருவிகள் செய்யப்பட்டன. உழவர்கள் அரசனது உதவி பெற்று மிகுதியான உணவுப் பொருள்களை விளைவு செய்தனர்.

ஒற்றர் வேவு பார்த்தல்: ஒரு நாள் நார்முடிச்சேரல் ஒற்றர்களை அழைத்து, "நீவிர் பூழிநாடு சென்று உளவறிந்து வாரும்" என்றான். ஒற்றரில் சிலர் தெருத் தெருவாய் அலைந்து வளையல், பவளம், மணிகள் விற்பார் போலவும், சிலர்

இச்சகம் பேசும் பிச்சைக்காரர் போலவும், சிலர் முற்றத் துறந்து மோனத்திருக்கும் முனிவர் போலவும் பூழிநாட்டை யடைந்தனர். 'தூண்டிற் காரனுக்கு மிதப்பின்மேல் கண்' என்பது போல், அவர்கள் தங்கள் குறிக்கோளின்மேல் கண்ணாக இருந்தனர். சில நாட்கள் சென்றன. ஒற்றர் சேர நாட்டை யடைந்து நார்முடிச் சேரலை வணங்கினர்.

ஒற்றர் உரைத்தல்: "சேரர்குலச் செம்மலே, நாங்கள் பூழி நாட்டை யடைந்தோம்; அந் நாட்டின் நிலையை நன்கறிந்தோம்; அறிந்த உண்மையை உங்களுக்கு உரைக்கின்றோம். அந் நாட்டு மக்கள் நாட்டுப் பற்றுடையவர்கள். பெற்ற தாயைப் பெரியோர் மதிப்பது போல், அவர்கள் தங்கள் நாட்டைப் பெரிதும் நேசிக்கின்றனர். அயலானாகிய நன்னன் தங்களை ஆள்வதை அவர்கள் விரும்ப வில்லை. குழப்பத்தை உண்டாக்கிப் புரட்சி செய்து அவனது ஆட்சியை வீழ்த்த ஏற்ற காலத்தை எதிர்பார்க்கின்றனர்" என்று கூறினர்.

பாசறையில் படைகள்: அன்று முதல் சேர நாட்டில் போர் முயற்சி உச்ச நிலையை யடைந்தது. வாகைப் பெருந்துறை என்னு மிடத்தில் தன்னுடன் போருக்கு வருமாறு நார்முடிச்சேரலின் செய்தி பறந்தது. போர் முரசம் முழங்கிற்று. சேரலின் நாற் படைக் கடல், வாகைப் பெருந்துறையை நோக்கிப் புறப்பட்டது. தூசிப் படலம் சூரியனின் வெப்பத்தை மறைத்துப் படைகளுக்குக் குடை பிடித்தது. சேரன் படைகள் வாகைப் பெருந்துறையை யடைந்தன. நன்னன் படைகளும் அங்குச் சென்றன. சென்று தத்தம் பாசறைகளில் பசியாறின. அவற்றிற்கு வயிற்றுப் பசி நீங்கிற்று. போர்ப் பசி நீங்கவில்லை.

போர்க்கள வருணனை: நார்முடிச் சேரலின் போர் முரசம் நன்னனைப் போருக் கழைத்தது. 'இதோ! போருக்கு வந்தோம்' என்று நன்னனது முரசம் பதிலுரைத்தது. போர் மிகக் கடுமையாக நடந்தது. ஒரு நாளன்று. இரு நாளன்று. பல நாள் பல வகையாகப் போர் நடந்தது. யானைகள்மீது வாள்கள் பாய்ந்து வெளியே வருவன, மேகத்தி லிருந்து மின்னல் வருவது போலவும், அவற்றின் பிளிறல் இடிபோலவும், குருதி பீறிட்டடிப்பது மழைபோலவும் காணப்பட்டன.

மாலைக் காலத்துச் செக்கர் வானம்போல் அப் போர்க்களம் தோன்றியது. குருதி வெள்ளத்தில் இறந்து கிடக்கும் யானைகள், செங்கடலில் கருங் குன்றுகள் போல் காணப்பட்டன. அப் போரில் இறந்த குதிரைகள் பல. முறிந்த தேர்கள் பல. மாண்ட காலாட் படைகள் பல.

நன்னனும், நார்முடிச் சேரலும் ஆவேசத் தோடு போர்புரிந்தனர். அவர்களுடைய உடல் களில் அம்புகள் பல பாய்ந்ததால் ஆடைகளும் அணிகளும் இரத்தத்தில் தோய்ந்தன. 'காவியுடை அணிந்த துறவிகள்தாம் போர்புரிகின்றனர்' என்று அறியாதோர் எண்ணினர். நார்முடிச் சேரல் விட்ட அம்பு நன்னனது மார்பைத் தட்டிப் பார்த்தது. நன்னன் விட்ட அம்பு நார்முடிச் சேரலின் முகத்தில் பொட்டிட்டது. நார்முடிச் சேரல் அதனை ஒரு கையாற் பிடித்து மற்றொரு கையால் உறையிலிருந்த குத்துவாளெடுத்து நன்னனது இருதயத்தைக் குறிபார்த்துக் குத்தினான். நன்னன் இவ்வுலகை வெறுத்தவனாய்

விண்ணுலகு சென்றான். அவனிருந்த பொற்றேர் இரத்தம் தோய்ந்ததால் பவளத் தேராயிற்று.

பூழி நாட்டில் விற்கொடி: வெற்றி முரசம் முழங்க, பாணர்கள் பாட, புலவர்கள் புகழ, படைகள் ஆரவாரிக்க நார்முடிச் சேரல் தான் முன் இழந்த பூழி நாட்டிற்குள் புகுந்தான். பூழி நாட்டு மக்கள், 'ஊழி முதல்வன் போல் வாழ்க' என்று அவனை வரவேற்றனர். அவன் அந் நாட்டில் விற்கொடியைப் பறக்கவிட்டான்.

பகைவன் நாட்டில் சேரன்: நன்னனது காவல்மரம் வாகை என்பது. (காவல் மரத்தைப் பற்றி இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் வரலாற்றில் காண்க.) அதை வெட்டி வீழ்த்தக் கருதினன் நார்முடிச் சேரல். அவன் முன் செல்ல, அவனது படைகள் பின் செல்ல அவன் கடம்பின் பெருவாயிலை அடைந்தான். அது நன்னனது நாடு.

யானைகளின் அருஞ்செயல்: அந்நாட்டின் கோட்டைக் கதவுகள் பூட்டப்பட்டிருந்தன. நார்முடிச் சேரல் அக் கதவுகளை உடைக்க மதயானைகளை ஏவினன். யானைகள் பிறைபோன்ற கூரிய கொம்புகளால் கதவுகளைத் தாக்கின. கதவுகள் உடையவில்லை. அக் கதவுகளுக்கு ஆதரவாகக் கணைய மரங்கள் நின்றன. யானைகளுக்குச் சினம் மூண்டது. சினத்தால் பின்னும் வன்மையாகத் தாக்கின. அதனால் சில யானைகளுக்குக் கொம்புகள் தெறித்தோடின. தெறித்தும் விடவில்லை. மேலும் ஊக்கத்தோடு தாக்கிக் கதவுகளை உடைத்தன. சேரன் கோட்டைக்குள் சென்றான்.

காவல் மரம்: கோட்டைக்குள் சென்ற நார்முடிச் சேரல் காவல் மரத்தைக் காத்து நின்ற

வீரரை வாளால் வெட்டினன். ஒரு வெட்டுக்கூடக் குறி தவறவில்லை. வெட்டிற்கு இரண்டொரு தலைகள் கீழே விழுந்தன. காவல்வீரர் அனைவரும் மாண்டனர். நன்னன் பல நாட்கள் பாதுகாத்து வந்த காவல் மரத்தை நார்முடிச் சேரல் வெட்டி வீழ்த்தினன். வீரர்கள் ஆரவாரம் செய்தனர்.

செய்த நன்மை: பிணி, பசி, மூப்பு, புலக்குறை, உடற்குறை முதலியவற்றால் துன்புற்ற குடிகளுக்குப் பொருள், உணவு, மருந்து முதலியன கொடுத்துப் பாதுகாத்தான். அதனல் பிணிக்கு மருந்தென்றும், பசிக்கு உணவென்றும், மூப்பிற்கு இளமை என்றும், குருட்டுக்குக் கண்ணென்றும், செவிட்டுக்குக் காதென்றும் குடிகள் அவனைப் போற்றினர். அவன் வீரத்தின் கூர்மை என்று பகைவர் அஞ்சினர்.

நார்முடிச் சேரலின் ஆட்சியின் சிறப்பையும் அரும் பெருங் குணங்களையும், செம்பொன்னில் மாசற்ற வைரங்களைப் பதித்ததுபோல் செந்தமிழில் அமைத்துப் பாடினர் காப்பியாற்றுக் காப்பியனர். அப் பாடல்கள் பதிற்றுப் பத்தின் நான்காம் பத்தாகச் சுடர்விடுகின்றன. புலவர் தன்னைப் புகழ்ந்து பாடியதை நார்முடிச் சேரல் விரும்ப வில்லை. அவன் புகழை விரும்பாப் புரவலன். புலவரது ஏழைமைக்கும் தமிழ்ப் புலமைக்கும் நாற்பது நூறுயிரம் பொன் பரிசு ஒருங்கு கொடுத்துத் தான் ஆளும் நாட்டில் ஒரு பகுதியும் கொடுத்தான்.

நார்முடிச் சேரலின் ஆட்சியின் மாட்சி இருபத்தைந்தாண்டு சுடர்விட்டொளிர்ந்தது.

6. செங்குட்டுவன்

போர்ச் செயல்கள்

பிறப்பு: இமயவரம்பனுடைய இரு மனைவியருள் ஒருத்தி சோழன் மணக்கிள்ளியின் மகள் நற்சோணை என்பவள். அவள் சோழர் குலத்தின் விளக்காய், சேரர் குலத்தின் ஒளியாய் விளங்கினள். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்கு நற்சோணையினிடம் பிறந்த மக்கள் சேரன் செங்குட்டுவனும், இளங்கோவடிகளு மாவர். செங்குட்டுவன் அண்ணன்; இளங்கோவடிகள் தம்பி. முன்னவன் புவி யரசன்; பின்னவர் கவி யரசர். இச் செய்தி உலகத்திற்குப் புதுமை.

சிறப்பு: செங்குட்டுவனது மாற்றாந்தாய் மகன் களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல். அவனுக்குப் பின் செங்குட்டுவன் அரசனாகி அரியணை ஏறினன். சேர மன்னர் வரலாறுகளுள் அவனது வரலாறுதான் சற்று விரிவுடையது. அவன் செய்த போர்களும் அதிகம். அவனைப் பற்றி அறிந்துகொள்ளக் கிடைத்துள்ள ஆதாரங்களும் பல. அவனது வில் வளைந்தது; சொல் வளையவில்லை. அவன் இரவலரிடத்து இரக்கமுடையவன்; பகைவரிடத்து ஆண்மை உடையவன்; பெரியோரைப் புகழ்ந்தான்; சிறியோரை இகழ்ந்தான்; அடங்கா மன்னரை அடக்கி யாண்டான்.

அரசரியல்பு: ஓரரசன் மற்றோர் அரசனோடு போர் புரிந்து வெற்றி யடைவான்; அன்றித் தோல்வி யடைவான். தோற்ற மன்னர் சிலர் வாளா இருப்பதில்லை. வெற்றி யடைந்த வேந்தனை வீழ்த்தச் சூழ்ச்சி பல செய்வர். அச் சூழ்ச்சி நிறை

வேறக் காலத்தை எதிர் நோக்குவர். ஒரு காலத்தில் பாரதநாடு முழுதும் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் வெண்கொற்றக் குடையின் கீழ் இருந்தது. அவன் மகன் செங்குட்டுவன் மணிமுடி சூடிய போது இமய வரம்பனல் வீழ்ச்சியுற்ற மன்னர் பலர் சூழ்ச்சி பல செய்து சிறிது சிறிதாகச் சுதந்தர மன்னராயினர். அவர்கள் உரிமை கொண்டாடிச் செங்குட்டுவனுக்குத் திறை கொடுக்க மறுத்தனர். அதனல் செங்குட்டுவன் பல போர் புரிய நேர்ந்தது.

கொங்கர் செங்களம்: கொங்கர் என்பவர் கொங்கு நாட்டை யாண்ட குறுநில மன்னர். அவர்களைக் கங்க அரசர் என்றும் கூறுவர். கொங்குநாடு சேரநாட்டின் ஒரு பகுதி. அதை எப்போதோ கங்க அரசர் கைப்பற்றினர். தன் நாட்டின் ஒரு பகுதியைக் கங்க மன்னர் கைப்பற்றியது செங்குட்டுவனுக்குத் தாழ்வாக இருந்தது. தன் உடலின் ஒருறுப்பை வெட்டிக்கொண்டதாகக் கருதினன் அவன் கங்க மன்னரைக் கடும் போருக் கழைத்துத் திருமுகம் அனுப்பினன்.

செங்குட்டுவன் திருமுகம் கங்க மன்னரைக் கலக்கிற்று. அவர் செய்வது யாதென்று தெரியாமல் திகைத்தனர். அவர்கள் உள்ளம் கருங்கடல் போல் அலைந்தது. சிந்தித்தனர்; சிந்தித்துச் சோழன் கிள்ளிவளவனையும் பாண்டியன் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியனையும் தமக்குத் துணையாக அழைத்தனர். அவர்களும் உடன்பட்டனர். ‘கொங்கர் செங்களம்’ என்னும் இடத்தில் போர் தொடங்கிற்று. மூவேந்தரும் உருத்திரனது முத்தலைச் சூலம்போல் கொங்கர் செங்களத்தில் ஒன்று கூடினர். சோழன் கிள்ளிவளவனும் பாண்டியன்

ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனும் கங்கரோடு சேர்ந்து எதிர்த்தனர். செங்குட்டுவன் தனித்து நின்று போரிட்டான்.

நூற்றுக்கணக்கான தேர்ப்படைகளும் ஆயிரக் கணக்கான யானைப் படைகளும் பதினுயிரக் கணக் கான குதிரைப் படைகளும் காலாட் படைகளும் மாண்டுபோயின. கங்க மன்னர் செங்குட்டுவனல் கொல்லப்பட்டனர். சோழன் தன் புலிக் கொடியையும் பாண்டியன் தன் கயற்கொடியையும் போர்க்களத்தே போட்டுவிட்டுப் புறங்கொடுத் தோடினர்

சோழரோடு போர்: புகார் நகரத்தைத் தலை நகராகக் கொண்டு ஆட்சி புரிந்தவர் புகார்ச் சோழர் என்றும், உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தவர் உறையூர்ச் சோழர் என்றும் கூறப்பட்டனர். கிள்ளிவளவனும் அவனது சந்ததியாரும் புகார்ச் சோழர். நெடுங் கிள்ளியும் அவனது சந்ததியாரும் உறையூர்ச் சோழர். இருவருக்கும் பகை வளர்ந்துகொண்டே வந்தது. புகார்ச் சோழருக்கும் உறையூர்ச் சோழ ருக்கும் காரியாற்றங்கரையில் போர் மூண்டது. செங்குட்டுவன் அம்மான் நெடுங்கிள்ளி, நலங்கிள்ளி யால் கொல்லப்பட்டான். அதனல் அவன் காரியாற் றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி எனப்பட்டான்.

நெடுங்கிள்ளி வீர சுவர்க்கமடைந்ததும் அவன் மகன் பெருநற்கிள்ளி பொன்முடி சூடினன். சூடி, அரியணை அமர்ந்து உறையூரிலிருந்து ஆட்சி புரிந்தான். அவன் ஆண்டில் இளைஞன். அதனல் அவனது பங்காளிகளாகிய புகார்ச் சோழர்

ஒன்பது பேர் நாட்டைப் பாழ்படுத்தினர். உறை யூர்ப் பகுதியில் ஒரே குழப்பம்; கலகம். பெரு நற் கிள்ளியால் அவற்றை அடக்க முடியவில்லை. கண்ணில் புண்பட்டவன்போல் அவன் கலங்கினன். ஒற்றர் அச் செய்தியைச் செங்குட்டுவனுக்கு உரைத் தனர்.

சோறு கொதிப்பதுபோல் செங்குட்டுவனது உள்ளம் கொதித்தது. ஏன்? தன் அம்மான் மகன் அல்லலுக்கு உள்ளானன் அல்லவா? அதனல் தனது படைகளை உறையூரை நோக்கி அழைத்துச் சென்றான். உறையூருக்குத் தெற்கிலுள்ள நேரி வாயில் என்னு மிடத்தில் புகார்ச் சோழரைத் தாக் கினன். அவர்களும் அஞ்சி ஓடாமல் அவனைத் தாக்கினர். செங்குட்டுவன் உடைவாளை எடுத்து, புகார்ச் சோழர் படை நடுவே புகுந்து கரகர வென்று சுழன்று, உடைவாளைச் சுழற்றி மனம் போனபடி வெட்டினன். சோழர் ஒன்பது பேரும் வீர சுவர்க்க மடைந்தனர். இப் போரைச் செங் குட்டுவன் ஒரு நாளைக்குள் முடித்தான்.

பெரு நற்கிள்ளி ஓடி வந்து செங்குட்டுவனைக் கட்டித் தழுவி வணங்கினன். குட்டுவன் மகிழ்ந் தான். தன் அம்மான் மகனை பெரு நற்கிள்ளியின் ஆட்சி இடையூறின்றி நடைபெற ஏற்றவற்றைச் செய்து தன்னாடு திரும்பினன் செங்குட்டுவன்.

இடும்பாதவனப் போர்: இடும்பாதவனம் என்பது சோழ நாட்டில் இக் காலத்தில் இடும்பா வனம் என்னும் ஊராக இருக்கலாம். கலகஞ் செய்த சோழரை யடக்கிய பின் இடும்பாதவனத்தைத் தாக்கினன் செங்குட்டுவன். தாக்கி, அவ் வூரிலிருந்த பல பசுக்களைக் கன்ருேடு கைப்பற்றித் தன்னூர்க்

குக் கொண்டுசென்று பாவலர்க்கும் பாணர்க்கும் ஏழைகளுக்கும் கொடுத்து அவன் இன்புற்ருன்.

பழையனோடு போர்: பழையன் என்னும் பெயருடையோர் இருவர் இருந்தனர். பாண்டிய நாட்டிலுள்ள மோகூர்ச் சிற்றரசன் ஒருவன், சோழநாட்டிலுள்ள போர் என்னும் ஊருக்குச் சிற்றரசன் மற்றொருவன். இருவருள் மோகூர்ப் பழையன் என்பானோடுதான் செங்குட்டுவன் போர் புரிந்தான்.

வடநாட்டு மோரியர் பெரும் படையுடன் தென்னாட்டின்மீது போருக் கெழுந்தனர்; பழையனைத் தங்கட்குப் பணியுமாறு கூறினர். பழையன் அதை மறுத்து அவர்களை எதிர்த்துத் தாக்கினன். போர் மிகக் கடுமையாக இருந்தது. ஆட்டு மந்தையில் வரிப் புலி புகுந்து வேட்டையாடுவது போல், பழையன் மோரியர் படையைத் தாக்கினன். அவர்கள் ஒருவர் பின் ஒருவராக ஓடினர்.

அறுகை என்னும் சிற்றரசன் ஒருவன் இருந்தான். அவன் செங்குட்டுவனுக்கு உயிர்த் தோழன். பழையன் மோரியரிடத்துப் போர்ப் பரீட்சை செய்தானல்லவா? அந்த வெற்றிக் களிப் பால், 'மேலும் வெற்றி பெறலாம்' என்று அறுகை மீது போருக்குச் சென்ருன். அதனல் அறுகை என்பவன் அல்லல்பட்டான். தன் நண்பன் அல்லலுறுவதை அறிந்தான் செங்குட்டுவன். அவன் சிங்கம்போல் முழங்கிக் காற்றுப்போல் விரைந்து காலன்போல் பழையனைத் தாக்கினன். பழையன் தன்னல் இயன்ற மட்டும் போர் புரிந்தான். என்ன பயன்? செங்குட்டுவனது செங்

கணை, பழையனது உயிரைக் கவர்ந்து சென்றது.

பழையனது காவல் மரம் வேம்பு. அம் மரத்தினைத் துண்டந் துண்டமாகச் செங்குட்டுவன் வெட்டினான். அக் கால வழக்கப்படி பழையனுடைய தேவிமாரின் நீண்ட கருங்கூந்தல்களைக் கயிறாகத் திரித்து அக் காவல் மரத் துண்டங்களை அதனால் கட்டி, குன்று போன்ற யானைகளைப் பூட்டி இழுக்கச் செய்தான் செங்குட்டுவன்.

கங்கையில் செங்குட்டுவன்: செங்குட்டுவன் பெற்றோரைத் தெய்வமாகப் போற்றினான். புண்ணிய தீர்த்தங்களிலும் தூய கடவுள் வழிபாட்டிலும் அவனுக்கு நிலைத்த நம்பிக்கை இருந்தது. கங்கை, யமுனை, நருமதை, சரசுவதி, காவிரி, குமரி, கோதாவரி ஆகிய ஏழும் புண்ணிய நதிகள். அவற்றுள் ஒன்று கங்கை. தன் தாய் நற்சோணையைக் கங்கையில் நீராட்ட வேண்டும் என்று அவன் கருதினான். பட்டத்து யானையை நன்கு அலங்கரித்து, அதன்மீது விதானம் அமைத்துத் தாயை அதில் எழுந்தருளச் செய்து கங்கையை நோக்கிச் செங்குட்டுவன் புறப்பட்டான்.

அவன் ஊர் பல சென்று, ஆறு பல தாண்டி, காடு பல கண்டு, மலை பல கடந்து கங்கையையடைந்தான். அதில் தன் தாய் நற்சோணையை நீராட்டித் தானும் நீராடினான். அச் செய்தி ஓராயிரம் ஆரிய மன்னர் காதில் விழுந்தது. இதுதான் தக்க சமயமென்று அவர்கள் செங்குட்டுவனை எதிர்த்தனர். செங்குட்டுவனுக்குத் தனது சிறிய படைத்துணை தவிர வேறு ஓர் உதவியும் இல்லை.

மன உறுதி, அறிவு, சூழ்ச்சி, வீரம் ஆகிய வற்றையே அவன் நாற் பெரும் படையாகக் கொண்டு தன்னந் தனியனாய் ஆரிய மன்னரைத் தாக்கினான்.

கருங்காலி மரத்தைப் பல யானைகள் தாக்கு வது போல் செங்குட்டுவனை ஆரிய அரசர் பலர் தாக்கினர். அவர்களை வாளால் வெட்டியும் அம்பால் துளைத்தும் வேலால் குத்தியும் அவர்கள் நற்கதி யடையட்டுமென்று அவர்களைத் தூக்கித் தூக்கிக் கங்கையாற்றில் எறிந்தான். கங்கையாறு இரத்த ஆறாக ஓடிக் கருங்கடலைச் செங்கட லாக் கிற்று. மாண்டவர் போக மாளாதவர் ஓடினர். செங்குட்டுவன் செய்த அப் போரைக் காலனும் கண் விழித்துக் கண்டு கலங்கினான். தாயோடு சென்ற செங்குட்டுவன் வெற்றி மாலைகளோடும் வஞ்சியை யடைந்தான்.

கடற்போர்: பதிற்றுப்பத்து ஐந்தாம் பத்தில் செங்குட்டுவனது கடற்போர் பல இடங்களில் சிறப் பிக்கப்பட்டுள்ளது. கடற்கொள்ளைக் கூட்டத்தார் கடலிற் செல்வோரைத் தாக்கி அடிக்கடி துன் புறுத்தினர். தாக்கப்பட்டோர் செங்குட்டுவனிடம் முறையிட்டனர். அக் கொடுஞ்செயல் புரிவோரைத் தொலைக்கவேண்டும் என்று நினைத்தான் செங் குட்டுவன். அவனது கட்டளையால் பல கப்பல்களில் கடற் படை சென்றது. பெருஞ் சுறா மீன்கள், சிறு முள்வாளை மீன்களைத் தேடுவதுபோல் செங்குட்டு வன் கடற்கொள்ளைக் கூட்டத்தாரைத் தேடினான்.

கடற்படை, கொள்ளைக் கூட்டத்தார் இருக்கு மிடத்தைக் கண்டுபிடித்தது. செங்குட்டுவன்

புகுந்து அவர்களை அலறத் தாக்கினான். எதிர்த் தாக்குதலும் சிறிது கடினமாக இருந்தது. சிறு குழந்தைகள் சினத்தினால் பொம்மைகளைத் தூக்கி எறிவது போல் செங்குட்டுவன் பகைவர்களைக் கடலில் எறிந்தான். சுறவு முதலிய பெருமீன்கள் அவர்களை விழுங்கிப் பசியாறின. கெண்டை, வாளை முதலிய சிறு மீன்களும் தின்று பசியாறின. கட்டுமரங்களிலும் தனித்தனி மரங்களிலும் பகைவர் சிலர் தொத்திக்கொண்டு அலைமேல் பறந்தனர். அவர்களிருந்த இடத்தை வாழத் தகுதியற்றதாகச் செங்குட்டுவன் செய்துவிட்டு வெற்றியோடு திரும்பினான்.

ஆற்றங்கரையில் அதிசயம்

இன்பக்காட்சி: செங்குட்டுவன் தன்னை எதிர்த்த பகைவராம் யானைகளை ஆற்றலாம் அங்குசத்தால் அடக்கி இலவந்திகை வெள்ளிமாடம் என்னும் மாளிகையில் இளங்கோவேண்மாளுடன் இனிதிருந்தான். அப்போது மலைவளம் கண்டு மகிழவேண்டும் என்ற ஓர் எண்ணமுண்டாயிற்று அவனுக்கு. அதனால் அவன் தன் பரிவாரங்களும் பாவாணர்களும் சூழப் பேரியாற்றின் கரையையடைந்தான். இயற்கை அவனுடைய கண்களுக்கு வகைவகையான விருந் தளித்துக்கொண் டிருந்தது. தினைமாவை இடிப்போருடைய வள்ளைப்பாட்டும் தேனெடுக்கும் வேடர் உண்டாக்கும் ஓசையும் யானை பிடிக்கும் குழியில் வீழ்ந்த யானைகளைப் பாகர் பழக்கும் ஓசையும் புலியோடு போர் செய்யும் யானையின் முழக்கமும் அவனுடைய காதுகளுக்கு விருந் தளித்துக்கொண் டிருந்தன.

அவள் யாரோ!: செங்குட்டுவனும் தங்க ளரசன் தங்கள் மலையை யடைந்த செய்தியை வேடர் கேட்டனர். அவர்கள் யானை வெண்கொம்பு, வெண்சாமரை, புலிக்குட்டி, யானைக்கன்று முதலான பொருள்களைக் கொண்டுவந்து செங்குட்டு வன் முன்னிலையில் வைத்து விழுந்து வணங்கினர்; எழுந்து நின்றனர். "அரசே, வாழ்க உம் கொற்றம். நாங்கள் இங்குக் காணாத காட்சி ஒன்று கண்டோம். அது உலகில் யாரும் காணாதது; நாங் களும் எண்ணாதது. மங்கை ஒருத்தி ஆறாத் துய ரோடு அதோ நிற்கும் வேங்கை மரத்தின் கீழ் நின்றாள். அப்போது விண்ணிலிருந்து விமானம் ஒன்று வந்தது. அதில் வந்த அவளது கணவனை அவளுக்குக் காட்டி விண்ணோர் புடைசூழ அவளை யும் விண்ணுலகத்திற்கு அழைத்துச் சென்றனர். அவள் யாரோ! யார் மகளோ அறியோம்! அரசே, பல்லாண்டு வாழ்க" என்று உணர்ச்சி ததும்ப உரைத்தனர்.

அவள் கற்புக் கடவுள்: அரசன் அருகி லிருந்தார் சீத்தலைச் சாத்தனார். அவர் அரசனை நோக்கி, "அறநெறி தவறா அரசே, தன் கணவ னோடு விண்ணுலகு சென்றவள் கண்ணகி. அவள் பிறந்த ஊர் காவிரிப்பூம் பட்டினம். அவள் கோவல னுக்கு வாழ்க்கைப்பட்டாள். கோவலன், மாதவிக் காகத் தன் முன்னோர் தேடிய பொருளெல்லாம் செல வழித்தான். தான் செலவழித்த பொருளைத் திரும் பப் பெறவேண்டுமென்று மதுரையைத் தன் மனைவி யோடு அடைந்தான். ஒரு பொற் கொல்லன் அவ னைத் தன் மனையில் இருக்கச்செய்து பாண்டியனிடம் சென்று, "அரசே வாழ்க, உங்கள் சிலம்பைத்

திருடிய திருடன் என் வீட்டில் இருக்கிறான்" என்று கோவலன்மேல் பழி சுமத்தினான்.

"சிலம்புடன் அவனைக் கொண்டு வருக" என்று சொல்ல நினைத்த பாண்டியன் வினை விளை காலமாதலின், "சிலம்புடன் அவனைக் கொன்று வருக" என்று கூறினான். கொலையாளிகள் கோவலனைக் கொன்றனர். கண்ணகி ஆராத் துயரோடு தன் கணவன் கள்வனல்லன் என்பதைப் பாண்டியனுக்கு எடுத்துக் காட்டினாள். அதைக் கண்ட பாண்டியன், "நானா அரசன்! என்னுயிர் போக" என்று உயிர் துறந்தான். அப்பொழுதே அவனோடு பாண்டிமா தேவியும் உயிர் துறந்தாள். கண்ணகி மதுரையில் தீயோரிருக்கும் இடங்களை எரித்தாள். பின் அவள் தன்னாட்டிற்குத் தனித்துச் செல்லாமல் நின்னாட்டை யடைந்தாள். அவள் கற்பு வாழ்க!" என்று கூறினார்.

செங்குட்டுவன் வினா: அதைக் கேட்டுச் செங்குட்டுவன் வியப்படைந்து தன் கோப்பெருந் தேவியாம் இளங்கோவேண்மாளை நோக்கி, "தன் கணவனோடு உயிர் துறந்தாள் பாண்டிமாதேவி. சினத்துடன் நம் நாடு நோக்கி வந்தாள் கண்ணகி. அந்த இரு கற்புக்கரசியருள் வியக்கத் தக்கவர் யார்?" என்று வினவினான்.

இளங்கோ வேண்மாள் விடை: அதைக் கேட்ட கோப்பெருந்தேவி, "தன் கணவனது துன்பத்தைப் பொறுக்காமல் உயிர்விட்ட பாண்டிமா தேவி விண்ணுலகத்தில் தன் கணவனுடன் இருக்கின்றாள். கண்ணகியோ தன்னாடு செல்லாமல் நம் நாட்டை நோக்கித் தனித்து வந்தாள். ஆகை

யால் அக் கற்புக் கடவுளை நாம் வணங்கவேண்டும்" என்று கூறினள்.

அமைச்சர் கூறல்: அதை அரசன் ஏற்று அமைச்சரை நோக்கினன். அமைச்சர் அரசனை வணங்கி, "வெள்ளருவி முழங்கும் இமயமலையிலேனும் செந்தமிழ் முழங்கும் பொதியமலையிலேனும் கண்ணகிக்குப் படிவஞ் செய்யக் கல் கொண்டுவர வேண்டும். இமயத்திலிருந்து கொண்டுவரும் கல்லைக் கங்கையில் நீராட்டித் தூய்மை செய்யவேண்டும். பொதியமலையிலிருந்து கொண்டுவரும் கல்லைக் காவிரியில் நீராட்டித் தூய்மை செய்யவேண்டும்" என்று கூறினர்.

இமயமா? பொதியமா?: "அமைச்சரே, பொதியத்தில் கல்லெடுத்துப் பொன்னியில் நீராட்டல் வீரர் குடிப் பிறந்த எம் சேரர் குடிக்குச் சிறப்புடையதன்று. இமயத்தில் கல்லெடுத்துக் கங்கையில் நீராட்டலே சேரர்க்குச் சிறப்புடையதாகும்" என்று கூறினன் செங்குட்டுவன். அவன் சொல்லும்போது சொல்லுக்குச் சொல் வீரம் பொங்கிக் கொண்டே இருந்தது.

வில்லவன் கோதை: செங்குட்டுவன் கூறிய வீர மொழிகளைக் கேட்ட வில்லவன் கோதை என்னும் படைத்தலைவன் அரசனை வணங்கி, "வெற்றி பெற்ற வேந்தே, வடநாட்டிலும் தென்னாட்டிலும் உம்மை எதிர்க்கும் அரசர் ஒருவரும் இலர். இருக்கும் அரசர்களில் பெரும்பாலோர் உம்மிடம் உயிர்ப் பிச்சை வாங்கி ஓடியவர்கள்தாம். கடல் சூழ் உலகத்தைத் தமிழ் நாடாக்கக் கருதுவீராயின் உம்மைத் தடுப்பவர் ஒருவருமில்லை" என்று கூறினன்.

நீலகிரியில் செங்குட்டுவன்

வஞ்சினம்: விண்மீன்களுக் கிடையில் முழு நிலவு விளங்குவதுபோல் அமைச்சர், படைத் தலைவர், புலவர், சான்றோர், இவர்கள் சூழச் செங்குட்டுவன் அரியணையில் வீற்றிருந்தான். அவனது முகம் சிவந்திருந்தது. அதனால் அங்கிருந் தோர் அஞ்சினர். செங்குட்டுவன் படைத் தலைவரை நோக்கி, "ஆரிய மன்னர் பலர் தம் நாட்டில் நிகழ்ந்த சுயம்வர மண்டபத்தில் ஒன்று கூடின போது, 'தமிழ் மன்னர்கள் வில், புலி, கயல் ஆகியவற்றை இமயத்தில் பொறித்தபோது அவர்களைத் தடுத்துப் போர் வெல்ல நம்போன்ற மன்னர்கள் இங்கே இல்லை போலும்' என்று இகழ்ந்ததாக இங்கு வந்த இமயத்து வாசிகள் கூறினர். இது என்னையே யன்றி என்போன்ற சோழ பாண்டியரையும் இகழ்ந்ததாகும். இகழ்ந்த ஆரிய மன்னரின் முடித்தலையில் பத்தினிக் கடவுளைச் செய்தற் குரிய கல்லை ஏற்றி வருவேன். அவ்வாறு செய்யேனாயின் நான் என் குடிகளை வருத்தும் கொடுங் கோலனாவேன்" என்று கடுகடுத்துக் கூறினான்.

வாளையும் குடையையும் அனுப்பல்: "அரசே, வாழ்க! பகைவரைப் பணிய வைக்கும் நல்ல நாள் இதுவே. ஆகையால் இப்போதே போருக்குச் செல்க" என்று கூறினான் ஒரு நிமித்திகன். படைகளைத் திரட்டிக்கொண்டு அப்போதே போருக்குச் செல்லச் செங்குட்டுவனால் முடியவில்லை. அதனால் அவன் அரச வாளையும் வெண் கொற்றக் குடையையும் தன் பட்டத்து யானையின் மீதேற்றி வஞ்சிமா நகர்க்கு வடக்கிலுள்ள கோட்டையில் இருக்கச் செய்துவிட்டு அத்தாணி

மண்டபத்தை யடைந்தான். போர்முரசம் முழங்க அரச வாளோடும் வெண்கொற்றக் குடையோடும் நால்வகைப் படைகளும் சென்றன. அன்றிரவு படைகளுக்கும் படைத் தலைவர்களுக்கும் செங் குட்டுவன் பெருஞ்சோ றளித்தான்.

நீலகிரிப் பாசறை: மறுநாட் காலையில் வஞ்சி யில் காலை முரசம் முழங்கிற்று. செங்குட்டுவன் காலைக் கடனை முடித்துச் சிவபெருமான், திருமால் முதலிய தெய்வங்களை வணங்கிப் போர்க்கோலங் கொண்டான். சூதரும் மாகதரும் வாழ்த்தினர். யானை வீரரும் குதிரைத் தலைவரும் வாளேந்திய மறவரும் ஆரவாரித்தனர். அலங்கரிக்கப்பட்ட பட்டத்து யானையின்மேல் செங்குட்டுவன் சென் ருன். நால்வகைப் படைகளும் பின் சென்றன. நீலகிரி மலைப்பக்கத்தில் பாசறை அமைக்கப்பட் டிருந்தது. செங்குட்டுவனும் அவனுடைய படை களும் அதில் தங்கி இளைப்பாறின.

நல்ல செய்தி: வாயிற் காவலன் செங்குட்டு வனை வணங்கி, "அரசே, சஞ்சயன் தலைமையின் கீழ் பலர் உம்மைக் காண்பதற்குக் காத்திருக்கின் றனர்" என்று கூறி வணங்கி நின்ருன். "அவர்கள் இங்கு வருக" என்று கட்டளை இட்டான் செங் குட்டுவன்.

சஞ்சயன் உள்ளே சென்று செங்குட்டுவனை வணங்கித் தன்னுடன் வந்தவரை அறிமுகஞ் செய்து, "அரசே, இமயமலைக்குச் சென்று கண்ண கிக்குப் படிவஞ்செய்யக் கல்லைக் கொண்டுவருவது உமது கருத்தாயின் அதை நூற்றுவர் கன்னர் உம்பொருட்டுச் செய்துவிடுவதாகக் கூறினர். உமது திருவுளம் யாதோ?" என்ருன்.

நீலகிரியை நீங்குதல்: "வடநாட்டு மன்னரான பாலகுமரன் மக்கள் கனகன் விசயன் என்போர் ஒரு விருந்தில் தமிழ்நாட்டு மன்னரை இகழ்ந்து கூறினராம். அவர்கள் எம் ஆற்றலை அறியவில்லைபோலும். கண்ணகிக்குக் கல் எடுப்பித்தலோடு அவர்கட்கு எம் ஆற்றலைக் காட்டுதற்கும் இப் படைகளை அழைத்துச் செல்கின்றேன். இச் செய்தியைக் கனக விசயர்க்குத் தெரிவிக்கவும். நீங்கள் முன்னே சென்று கங்கையைக் கடப்பதற்கு ஓடங்களை ஆயத்தஞ் செய்யுங்கள்" என்று சஞ்சயனுக்குக் கட்டளை இட்டுச் செங்குட்டுவன் நீலகிரியை விட்டுப் புறப்பட்டான்.

கனக விசயர் தலையில் கல்

வட நாட்டில் உபசரிப்பு: இமயத்தை எப்போது அடைவோம் என்ற எண்ணம் செங்குட்டுவனை அலைத்துக்கொண்டே இருந்தது. அவன் இமயத்தை நோக்கிப் பெரும் படையுடன் விரைந்து சென்றான். முன்னமே செங்குட்டுவனால் அனுப்பப்பட்ட சஞ்சயன் தமிழ்ப் படைகள் கங்கையாற்றைக் கடக்கப் பல படகுகளை ஆயத்தம் செய்திருந்தான். அவன் செங்குட்டுவனை வரவேற்று உபசரித்தான். அதனால் செங்குட்டுவன் உள்ளம் பூரித்தது. அவன் தன் படைகளோடு ஓடமேறிக் கங்கையின் வட கரையை யடைந்தான். அவனது வருகையை எதிர்பார்த்திருந்த நூற்றுவர் கன்னர் அவன் படைகளையும் வரவேற்று உபசரித்தனர்.

கனக விசயரோடு போர்: செங்குட்டுவன் கங்கையின் வடகரை சென்று உத்தர கோசலம் என்னும் வளநாட்டை யடைந்தான். அது பகை

வரது நாடு. அங்கு அமைத்திருந்த பாசறையில் செங்குட்டுவன் தங்கினான். அதை ஆரிய மன்னராம் கனக விசயர் அறிந்தனர். அறிந்து, "ஒரு தமிழரசன் நம் நாட்டிற்கு அச்சமின்றி வந்தான்: வந்ததோடன்றிப் பாசறையும் அமைத்தான்; அமைத்ததோடன்றி அதிலிருந்து ஆரவாரமும் செய்கிறான். பார்ப்போம் அவனது ஆற்றலை" என்று வீராவேசத்தோடு கூறினர். பின்னர் உத்திரன், விசித்திரன், உருத்திரன், பைரவன், சித்திரன், சிங்கன், தனுத்தரன், சிவேதன் என்ற ஆரிய மன்னர்களைத் துணையாக அழைத்தனர். அவர்களெல்லோரும் உடன்பட்டு உத்தர கோசலத்தை அடைந்தனர்.

கனக விசயர் அவர்களைத் துணைக்கொண்டு, 'தமிழர் ஆற்றலைக் காண்போம்' என்று செங்குட்டுவனைத் தாக்கினர். இரையை விரும்பி வேட்டைக்குச் சென்ற சிங்கம், யானைக் கூட்டத்தைக் கண்டு பாய்ந்ததுபோலச் செங்குட்டுவனும் பகைவர்மீது பாய்ந்து தாக்கினான். போர்க்களத்தில் பறக்கும் கொடிகளின் கூட்டத்தினால் வெயில் மறைந்து போயிற்று. நிலம் தெரியாமல் கிளம்பிய புழுதி, யானைகளின் கழுத்திற்குக் கட்டிய மணிகளில் படிந்து அவற்றை ஒலிக்காமல் செய்துவிட்டது. போர்க்களம் பிணக்களமாக மாறிற்று. பகைவரின் படைகள் பதினாயிரக் கணக்கில் மாண்டன. கனக விசயரும் ஐம்பத்திருவரும் கைது செய்யப் பட்டனர். சிலர் ஆயுதங்களை எறிந்துவிட்டு ஓடினர். பலர் சடைமுடி தரித்துச் சந்நியாசிகளாகவும், மயிற் பீலி ஏந்திய சமண முனிவராகவும் ஓடி ஒளிந்தனர். செங்குட்டுவன் வில், புலி, கயல் ஆகிய

NO. 8632

மூவேந்தரின் பொறிகளை இமயத்திற் பொறித்தான்.

கைது செய்யப்பட்ட கனக விசயரைச் செங்குட்டுவன் இமயத்திற்குக் கொண்டு சென்றான். அங்குக் கண்ணகி படிவஞ் செய்தற்குரிய கல்லை ஆராய்ந்தெடுத்துக் கனக விசயரின் முடித் தலையில் செங்குட்டுவன் ஏற்றினான். பொன்முடி ஏறிய தலையில் கற்பாறை ஏறியது செருக்கினால் நிகழ்ந்த செயல்.

செங்குட்டுவன் வஞ்சியை யடைதல்

நீராட்டு விழா: வெற்றி முரசம் முழங்க, 'வெண் சங்கம் ஊத' விற்கொடியின் கீழ்க் கனக விசயர் கல் சுமக்கக் கங்கையின் வடகரையைச் செங்குட்டுவனும் அவனுடைய வீரரும் அடைந்தனர். படிவக் கல்லைக் கங்கையில் நீராட்டக் கட்டளையிட்டான் செங்குட்டுவன். அவ்வாறே முறைப்படி கங்கையில் கல் நீராட்டப்பட்டது. வீர பத்தினிக்கு வீரர்கள் முதன் முதல் வணக்கம் செலுத்தினர். பின் நாவாய்கள் மூலம் கங்கையைக் கடந்து தென்கரையைச் செங்குட்டுவன் அடைந்தான். அவனுக்கும் அவனுடைய பரிவாரங்களுக்கும் அரண்மனையும் மண்டபங்களும் நூற்றுவர் கன்னர் அமைத்திருந்தனர். அவற்றில் செங்குட்டுவனும் அவனது பரிவாரங்களும் தங்கின.

வீரர்க்கு வெகுமதி: பகைவரை வெட்டி வீழ்த்தி வெற்றி மாலை புனைந்த வீரர்களைச் செங்குட்டுவன் தன்னருகில் அழைத்தான்; வெகு நேரம் அவர்களோடு இன்சொற் கூறி உரையாடினான்; பாராட்டிப் பேசினான். பேச்சோடு நிற்கவில்லை.

பொன்னுலாகிய வாகைப்பூக்களைத் தான் பிறந்த வெள்ளணி நாளில் கொடுக்கும் கொடையினும் மிகுதியாகக் கொடுத்தான் செங்குட்டுவன்.

மாடலன் வருகை: கங்கையின் தென்கரையில் செங்குட்டுவன் அமர்ந்திருக்கும்போது மாடலன் என்னும் மறையவன் அங்கே சென்றான். அவன் தமிழ் நாட்டிலுள்ள தலைச்செங்காட்டினன். அவன் செங்குட்டுவனை வணங்கி, "அரசே, மாதவி பாடிய கடற்கரைப் பாட்டு, கனக விசயர்தம் முடித்தலைகளை நெரித்தது. அரசே வாழ்க!" என்று கூறினன்.

மாடலன் கூறிய அச் சொல் செங்குட்டுவனை மயக்கிற்று. "பகையரசரும் அறியாத நகைச் சொல்லொன்றைக் கூறினை. அதன் பொருள் யாது?" என்று வினவினன் செங்குட்டுவன். காவிரிப்பூம்பட்டினத்தில் நடந்த இந்திர விழா முதல், மாதவி தன் நீள் கருங் கூந்தலைக் களைந்து அவளும் அவள் மகள் மணிமேகலையும் பௌத்த விகாரம் அடைந்தது வரை மாடலன் கூறினன்.

நிமித்திகன் கூறியது: நெடு நாட்களுக்குப் பின் அச் செய்தியைச் செங்குட்டுவன் கேட்டதனல் வியப்புற்றிருந்தான். அப்போது செந்தீப் பரந்ததுபோல் விண்ணில் வெண்பிறை தோன்றிற்று. அதைச் செங்குட்டுவன் உற்று நோக்கினன். அப்போது அருகிலிருந்த நிமித்திகன், "வெற்றி வேந்தே, நீர் வஞ்சியிலிருந்து புறப்பட்டு முப்பத்திரண்டு திங்கள்களாகின்றன" என்று கூறினன்.

மைத்துனன்மேல் ஆவல்: அதைக்கேட்ட செங்குட்டுவன் ஒன்றும் கூருமல் அவ்விடத்தை

விட்டுச் சிற்ப வேலையும் சித்திர வேலையும் மிகுந்த அத்தாணி மண்டபத்தை யடைந்தான்; வாயிற் காவலனை அழைத்து, மாடலனை அழைத்துவரக் கட்டளை இட்டான். வாயிற் காவலன் சென்று மாடலனை அழைத்து வந்தான். செங்குட்டுவன் அவனைப் பார்த்து, "எனது மைத்துனனாகிய பெருநற் கிள்ளியின் ஆட்சி செம்மையாக நடவாத படி ஒன்பது சோழர் இடையூறு செய்தனர். நான் அவர்களைத் தொலைத்தேன். பின்னர் என் மைத்துனனுக்கு யாராகிலும் இடையூறு செய்தனரா?" என்று வினவினான். "இடையூறு செய்பவர் இருந்தால்தானே இடையூறு? மைத்துனச் சோழனது ஆட்சி சிறப்பாக நடைபெறுகின்றது" என்றான் மாடலன். அவன் நற்செய்தி கூறியதற்குச் செங்குட்டுவன் மகிழ்ந்து தன் நிறை அளவாக ஐம்பது துலாம் பொன் அவனுக்கு வழங்கி விடை கொடுத்தனுப்பினான். செங்குட்டுவனை வாழ்த்திச் சென்றான் மாடலன்.

சோழ பாண்டியர்க்குக் காட்டுங்கள்: தன் வடநாட்டுப் போருக்கு உதவிய கன்னர் நூறு பேருக்கும் செங்குட்டுவன் நன்றி கூறி அவர்களைத் தத்தம் நாடுகளுக்குப் போகுமாறு கூறினான். அவர்கள் குட்டுவனிடம் விடைபெற்றுத் தம் நாட்டை யடைந்தனர். செங்குட்டுவன் தூதுவரை அழைத்து, "நம் ஆற்றலை அறியாமல் போர்க் கோலம் பூண்டு தோல்வியுற்றுத் தவக் கோலம் கொண்ட இந்த ஆரிய இளவரசர்களைக் கொண்டு போய்ச் சோழ பாண்டியர்க்குக் காட்டுங்கள்" என்று கட்டளை இட்டான். தூதுவர் அவனை வணங்கி அவர்களை அழைத்துச் சென்றனர்.

ROJA. MUTHIAH
ARTIST

செங்குட்டுவன் மலரணைமேல் மலர்க்கண் குவியத் துயிலச் சென்றான்.

தன்னாடு திரும்பினான்: அதிகாலையில் செங்குட்டுவன் எழுந்து நித்தியக் கடனை முடித்துத் தன்னாட்டிற்குப் புறப்பட்டான். பல காடு, மலை, சோலை, ஊர்கள் கடந்து வஞ்சிமா நகரை நெருங்கினான். அவனது வருகையை முன்னமே அறிந்த நகர மக்கள் எதிர்சென்று மங்கள இயங்கள் முழங்க, 'வானவன் வாழ்க' என்று வாழ்த்தி வரவேற்றனர். அவர்கள் தாய்ப் பசுவைக் கண்ட கன்றுபோல் மகிழ்ந்தனர். அரண்மனையை நெருங்கியதும் கருங் குன்றிலிருந்து சிங்கம் குதித்தது போல் பட்டத்து யானைமேலிருந்து சடுக்கென்று இறங்கினான் செங்குட்டுவன்.

கோயிலில் கண்ணகி சிலை

மாடலன் வருகை: அவன் பலவகை இன்பக் காட்சிகளைக் கண்டு பேரோலக்க மண்டபத்தை யடைந்தான். போர்த் தலைவர்களான நீலன், மாடலன் முதலானோர் வாயிற் காவலனிடம் தங்கள் வருகையை அரசனுக்கு அறிவிக்கக் கூறினர். அவன் அரசனை வணங்கி, "எல்லாப் போர்களிலும் வெற்றியடைந்த வேந்தே, உங்களைக் காண்பதற்கு நீலன் முதலானோர் வாயிலில் காத்துக்கொண் டிருக்கின்றனர்" என்று கூறி வணங்கி நின்றான். "அவர்களை வரவிடுக" என்றனன் அரசன். வாயிற் காவலன் விரைந்து சென்று அவர்களை அழைத்து வந்தான். அவர்கள் அரசனை வணங்கினர்.

மீண்டுவந்தோர் கூற்று: "அரசே, நாங்கள் சோழனைக் கண்டு நீர் சிறைப்பிடித்த ஆரிய

மன்னரைக் காட்டி வணங்கி நின்ருேம். 'போர்க் களத்தில் பெரும் போர் செய்து கூரிய வாளையும் வெண் கொற்றக் குடையையும் போர்க்களத்திட்டுப் புறங்கொடுத்து ஓடிய ஆரிய மன்னரைப் பிடித்து வந்திருப்பது வெற்றியாகாது" என்று தன் தேர்ப் படைத் தலைவனிடம் கூறிச் சிரித்தான். "பின் சோழநாட்டை நீங்கிப் பாண்டிய நாட்டை யடைந்து, மதுரை சென்று பாண்டியனைக் கண்டு வணங்கினேம். ஆரிய மன்னரைக் காட்டி நடந்ததைச் சொன்னேம். 'இந்த ஆரிய மன்னர் கடும்போர் செய்து வெண் கொற்றக் குடைக் காம்பை நட்டுவர் போல் கையிற்பிடித்து ஓடினர். சிலர் கண்ணுதற் கடவுளை வணங்குவோராய்க் காவியுடை யுடுத்துக் கமண்டலமேந்தித் தவக்கோலங்கொண் டோடினர். அவர்களைப் பிடித்துவந்த அரசனது வெற்றியே ஒரு புதுமையாகும்' என்று பாண்டியன் அலட்சியமாகக் கூறினன்" என்று நீலன் கூறினன்.

மாடலன் அறவுரை: அதைக் கேட்ட செங்குட்டுவனுக்குச் சினம் பொங்கி எழுந்தது. அவனது விற்புருவங்கள் நெற்றியிலேறின. அவனது சினத்தை முகத்தி லறிந்த மாடலன், "அரசே, நீங்கள் அறநெறியை ஆராய்ந்தறிந்தவர். உங்களுக்கு வயது ஐம்பது. நீங்கள் செய்த போர்களோ பல. அவற்றில் இறந்த உயிர்களோ எண்ணில! நீங்கள் தொடங்கிய போர்களில் எல்லாம் வெற்றி. போரையே செய்துகொண் டிருந்தால் புண்ணியச் செயல்களை என்று செய்வது? போர்க்களத்தில் பகைவரைக் கொல்லுதல் எளிது. மனம், புத்தி, அகங்காரம், சித்தம், ஐம்புலன்கள் முதலியவற்றை அடக்குவது அரிது. மேலோர் விரும்பும் பெரு

வேள்வி செய்க. ஊழிக்காலம் வரை உலகம் காத்து வாழ்க" என்று கூறி முடித்தான்.

பெருவேள்வி: செங்குட்டுவனது உள்ளம் பெரு வேள்வி செய்ய அவாவிற்று. அவன் நான் மறை வல்ல அந்தணரை வரவழைத்துப் பெரு வேள்வி செய்யக் கட்டளை இட்டான். ஆகவே முறைப்படி வேள்வி தொடங்கிற்று. ஏழைகளுக்கும் பாணர்களுக்கும் கலைஞர்களுக்கும் மிகுதியாகப் பொருள் கொடுக்கப்பட்டது. அன்று ஆரிய மன்னராம் கனக விசயரைச் செங்குட்டுவன் சிறையிலிருந்து விடுதலை செய்தான். பூமலியும் பொழில் சூழ்ந்த வேளாவிக்கோ மாளிகையில் அவர்களை வீற்றிருக்கச் செய்து வேள்வி முடிந்த மறுநாள் அவர்களைத் தம் சொந்த நாட்டிற்கு அனுப்புவதாகக் கூறினன். கனகவிசயர் களிப் புற்றனர். படைத்தலைவனும் வில்லவன்கோதையை அவர்கட்கு ஏற்ற உபசாரம் செய்யக் கட்டளை யிட்டான் செங்குட்டுவன். அழும்பில் வேளோடு ஆயக்கணக்கரை அனுப்பிச் சிறைக் கோட்டத்தில் உள்ள அனைவரையும் விடுதலை செய்து சிறைச் சாலைகளைத் தூய்மையாக்கக் கட்டளை இட்டுத் திறையை நீக்கிவிடவும் ஆணையிட்டான்.

கண்ணகியின் கோவில்: இந்த உடலோ விண்ணில் தோன்றும் மின்னல் போன்றது. அழி யாப் புகழுள்ள பத்தினிக்கு ஏற்ற அழியாக் கோயி லொன்று கட்ட வேண்டும் என்று பல நாள் அவன் நினைத்ததுண்டு. வட நாட்டுப் பாசறையில் செங் குட்டுவன் தங்கியிருந்தபோதும் தான் அமைக்கக் கருதிய பத்தினிக் கோயிலின் உருவம் அவனது மனக்கண்ணில் தோன்றியது. அவன் மனத்

திலேயே பல கோயில்களைக் கட்டி அவற்றுள் ஒன்றைத் தேர்ந்தெடுத்து அதைப் போலவே பத்தினியின் கோயிலைக் கட்டத் தீர்மானித்தான். கைவன்மையிற் சிறந்த தொழிலாளர் பல நாடுகளி லிருந்து சேர நாடு சென்றனர். அவர்களுக்குப் பொருள் மிகக் கொடுத்துக் கோயிற் பணியில் ஈடு படக் கூறினான். அது கலைக்கோயிலாகவும் கற் பரசி கோயிலாகவும் விளங்க வேண்டும் என்பது சேரன் எண்ணம். அவனது எண்ணம்போல் கோயில் தோற்றமளித்தது. பகைவரை வெகுண்டு நோக்கிய கண்களால் செங்குட்டுவன் கோயிலைக் குளிர்ந்து நோக்கினான். கனகவிசயரைச் சிறை செய்த நாளினும் அவனுள்ளம் பெருமகிழ்ச்சி யடைந்தது.

பிரதிட்டை செய்தல்: இமயத்திற் பிறந்து கனகவிசயர் முடிமேலிருந்து, தூய கங்கையில் மூழ்கி, வஞ்சியிற் கிடந்த இமயக் கல்லைச் சிற்பக் கலையில் கை தேர்ந்த பரம்பரைச் சிற்பிகள் தங்கள் கண்ணையும் கருத்தையும் ஒன்றாகச் செலுத்திக் கண்ணகியின் வடிவமாகச் செதுக்கினர். அச் சிற்பி கள் தெய்வத்தன்மை வாய்ந்தவர்கள். செங்குட்டு வன் அந்தப் படிவத்திற்குச் சிறந்த அணிகலன்கள் பூட்டி அக் கோயிலில் நாட்டினான். அதற்கு வந் திருந்த பல நாட்டு மன்னர்களும் உள்ளமுருகி உடலுருகி நின்றனர். நாள்தோறும் பூசையும் விழாவும் நடக்க மிகுதியான நிலங்களைக் கொடுத் துக் கண்ணகியின் தோழியாகிய தேவந்தியைப் பூசை முதலியன செய்யச் செங்குட்டுவன் கட்டளை யிட்டான். தனக்கு இத்தகைய பெரும் பேறு கிடைத்ததே என்று அவன் மிகவும் மகிழ்ந்தான்.

ROJA MUTHIAH
47, HOSPITAL STREET

செங்குட்டுவன் கண்ணகியை மூன்று முறை வலம் வந்து வணங்கி உருகி நின்றான். சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்ட ஆரிய மன்னரும் கொங் கிளங் கோசரும் மாளவ மன்னரும் இலங்கைக் கயவாகு மன்னனும் அத் தேவியை வணங்கினர். வணங்கி, "எங்கள் நாடுகளிலும் உனக்குக் கோயில் கட்டி உன்னைப் பிரதிட்டை செய்யப்போகிறோம். ஆங்காங்கே நீ எழுந்தருள வரம் வேண்டுகின்றோம்" என்றனர். 'தந்தேன் வரம்' என்று ஒரு குரல் எழுந்தது. அதைக் கேட்ட செங்குட்டுவனும் மற்ற மன்னர்களும் வீரர்களும் வியப்புற்று மகிழ்ந்தனர்.

புலவர் பரிசு: சேரன் செங்குட்டுவன்மீது பதிற்றுப்பத்தின் ஐந்தாம் பத்தைப் பாடினார் பரணர். செங்குட்டுவன் மகிழ்ந்து உம்பற்காடு என்னும் சிறு நாட்டின் வருவாயையும் தன் மகன் குட்டுவன் சேரலையும் பரிசாகக் கொடுத்தான், செங்குட்டுவன் ஐம்பத்தைந்தாண்டு ஆட்சி புரிந்தான்.

7. ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்

கவர்ந்ததை மீட்டல்

பொருள்: செல்வம் பல வகைப்படும். அவற்றுள் ஆடுமாடுகளும் செல்வமாகும். சில அரசர்கள் பகையரசரின் ஆடுமாடுகளையும் கைப்பற்றிச் செல்வர். பறிகொடுத்த அரசன் அவற்றை மீட்டலும் உண்டு.

இமையவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்கு வேளாவிக்கோமான் மகள் பதுமன் தேவியினிடம் பிறந்தவன் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன். அவன் களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரலின் தம்பி. நார்முடிச்சேரலின் ஆட்சிக்குப் பின் அவனது மாற்றாந்தாய் மகனை செங்குட்டுவன் அரியணை ஏறினன். அவனுக்குப் பின் அவனது மாற்றாந்தாயின் மற்றொரு மகன் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் அரசனானன்.

பண்டைக் காலத் துறைமுகப் பட்டினமாகிய தொண்டி என்னும் நகரிலிருந்து அவன் ஆட்சி புரிந்தான். முற்கூறிய சேரர்கள் வஞ்சியிலிருந்து ஆட்சி புரிந்தனர். ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் சிறந்த செங்கோலன்; அறம் வளர்த்த அரசன்.

சேர நாட்டில் மலைகள் அதிகம். அதனல் அது மலை நாடு எனப்பட்டது. ஓங்கி வளர்ந்த மலைகளில் அடர்ந்து நெருங்கிய மரஞ்செடி கொடிகள் மிகுதியாக உண்டு. அவற்றைத் தின்று கொழு கொழு என்று கொழுத்தன ஆடுகள். அந்த ஆடுகள் மாடுகள்போல் தோற்றமளிக்கும்!

தண்டாரணியம் என்பது ஆரிய நாட்டிலுள்ள ஒரு நாடு. இராமாயணத்தில் வரும் தண்டகாரணியமாக இருக்கலாமோ என்ற ஐயம் உண்டாகிறது. 'தண்டாரணியம்' என்பது பம்பாய் இராச்சியத்திலுள்ள ஒரு நாடு என்று டாக்டர் பண்டார்கார் என்னும் சரித்திர ஆசிரியர் கூறுகின்றார். சேர நாட்டின் வடகோடியில் கணக்கற்ற மலைகள் உண்டு. அம் மலைகளில் மிகுதியாக மலை ஆடுகள் உண்டு. வரிப்புலி முதலிய விலங்குகளால் அவற்றிற்குச் சிறிது துன்பமும் வராதபடி சேரர்களால் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருந்தது. அந்த ஆடுகளைக் கைப்பற்ற நினைத்தான் தண்டாரணியத்து வேந்தன். அவன் தன் படைகளைத் திரட்டி, அம் மலை வழிகளை முற்றுகை இட்டு, ஆடுகளைச் சூழ்ந்துகொண்டான். இடையர்கள் எதிர்த்துத் தோற்றனர். தண்டாரணியத்து மன்னன் ஆடுகளை ஓட்டிக்கொண்டு தன்னாட்டை நோக்கி நடந்தான்.

போர்க்குப் புறப்படல்: ஒற்றர்கள் ஓடிப் போய் அரசனுக்கு அறிவித்தனர். அவனது மலர் முகம் சிவந்தது. அரசன் கடுஞ்சினங் கொண்டு போர்முரசு அறையக் கட்டளையிட்டான். ஆயுதந் தாங்கிய தேர்ப்படைகளும் காலாட்படைகளும் குதிரைப் படைகளும் குவிந்தன. ஆடுகோட் பாட்டுச் சேரலாதன் போருக்குப் புறப்பட்டு ஆடுகள் கவரப்பட்ட இடத்திற்குச் சென்றான். அது அவனுக்கு ஏமாற்றத்தைத் தந்தது. ஏன்? பகையரசன் முன்னமே ஆடுகளை ஓட்டிக்கொண்டு தண்டாரணியத்தை அடைந்துவிட்டான்.

படைத்தலைவன் கூறல்: சேரனுக்கு முன்னைவிடச் சினத்தீ கொழுந்துவிட் டெரிந்தது.

அவன் தண்டாரணியத்தை நோக்கித் தன் படைகளைப் போகுமாறு கூறினன். அப்போது படைத் தலைவன் அரசனை வணங்கி, "அரசே, வாழ்க! நாம் போருக்கு வருமுன் பகைவர் ஓடிப்போயினர். அந்தக் கோழைகள்மேல் நாம் போருக்குச் செல்வது சிறு பூச்சிகள்மீதும் கறையான்கள் மீதும் சிங்கம் போருக்குச் செல்வதுபோல் ஆகும். மேலும், போரில் புறங்கொடுத் தோடியவரைத் தாக்கார் தமிழ் மன்னர். அரசே, சினந்தணிக" என்று கூறி வணங்கி நின்றனன்.

அரசன் விடை: "புறங்கொடுத்தோர்மீது போருக்குச் செல்வது அறமன்றுதான். அவர்கள் கைப்பற்றிச் சென்ற நம் ஆடுகளை மீட்கவே போருக்குச் செல்கிறோம். ஆடுகளை மீட்காவிட்டால் நம்மைக் கோழைகள் என்று அரசர்கள் இகழாரோ? அற்பப் பொருளும் அழிவை உண்டாக்குகின்றது. நுண்ணிய மெல்லிய இராம பாணப் பூச்சிகளும் கறையான்களும் புலவர்கள் சிந்தனைத் தேரேறி அருமையாகத் தேடிச் சேர்த்து வைத்திருந்த இலக்கியப் பெரும்பொருள்களை மண்ணோடு மண்ணாக மாற்றின. அதுபோல் நம் ஆடுகளைக் கவர்ந்து ஓடியவர்களைக் கோழைகளென்று விட்டுவிட்டால் பலர்க்குப் பல அழிவுகளை உண்டாக்குவர். அதனால் அவர்களை என் வீர வாளுக்கு இரையாக்குவேன்" என்று அரசன் வீராவேசத்துடன் பேசினன். "போருக்குச் செல்வோம், போருக்குச் செல்வோம்" என்று வீரர்கள் ஆரவாரித்தனர்.

போர் மூண்டது: ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் படைகளைத் திரட்டிக்கொண்டு தண்டாரணி

யத்தை நோக்கிச் சென்றான். சங்குகளும் வீரக் கொம்புகளும் மாலையணிந்த முரசங்களும் முழங்கக் கொடிய கற்களையுடைய அழல் பறக்கும் காட்டிலே ஆடுகள் சென்ற அடிச்சுவடுகளைப் பின்பற்றிப் படைகள் சென்றன.

ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் தண்டாரணி யத்தை யடைந்தான். அந் நாட்டரசனும் தன் படைகளோடு அவனை எதிர்த்தான். வெண்கல உடல்களை எல்லாம் ஒளிர்வாள்கள் பவள உடல் களாக மாற்றப் பலர் போர்க்களத்தில் வீழ்ந்தனர். விழாதவர் தம் இரும்பு மார்பில் தைத்த அம்புக ளைப் பிடுங்கிச் சுழற்றி ஆடினர். அதற்கேற்ப உடுக்கைகள் அடிக்கப்பட்டன. சில வீரர்களின் உடல்கள் முழுவதும் அம்புகள் தைத்ததால் போர் செய்ய முடியாமல், அவர்கள் நிலத்தில் விழ, நிலமகளின் உடலை அவர்கள் தொடாதபடி அம்பு கள் தாங்கிக்கொண்டன. இவ்வாறான போரிலே தண்டாரணியப் படைகள் மிகுதியாக மாண்டன. அவன் தண்டாரணியத்தில் விற்கொடியைப் பறக்க விட்டு ஆடுகளை மீட்டுத் தன்னாட்டினை யடைந்தான். அதனால் அவனை 'ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்' என்று வழங்கினர். அவன் மீட்டுச் சென்ற ஆடு களைப் பலருக்குக் கொடுத்துப் பார்ப்பார்க்குப் பசுக்களையும் ஓர் ஊரையும் கொடுத்தான்.

பாடியவருக்குப் பரிசு: அவனது அருங் குணத்தினையும் போர்த்திறத்தினையும் புனைந்து காக்கை பாடினியார் நச்செள்ளையார் பாடினார், பத்துப் பாட்டுக்கள். அவை பதிற்றுப்பத்தின் ஆறாம் பத்தாக அமைந்துள்ளன. ஆடுகோட்

பாட்டுச் சேரலாதன் மகிழ்ந்து காக்கை பாடினி யாரைப் பார்த்து, "அணிகலன்கள் செய்து நீர் அணிந்துகொள்க" என்று ஒன்பது துலாம் பொன்னும் நூறுயிரம் பொற்காசும் பரிசிலாகக் கொடுத்தான். கொடுத்துத் தன் அரியாசனத்தின் பக்கத்தில் சரியாசனம் கொடுத்து இருக்கச் செய்தான்.

குழந்தையைத் தாய் பாதுகாப்பதுபோல் அம் மன்னன் முப்பத்தெட்டு ஆண்டு நாட்டைப் பாது காத்து ஆட்சி செலுத்தினன்.

8. செல்வக் கடுங்கோ வாழியாதன் சோழனோடு போர்

மரபு: முற்கூறிய சேரர்கள் தந்தைக்குப் பின் மகனோ அன்றி அண்ணனுக்குப்பின் தம்பியோ அரசராயினர். அரசரான முறை தொடர்பாக வந்துகொண் டிருந்தது. இடையில் தொடர்பற்று அந்துவஞ்சேரல் இரும்பொறை என்னும் அரசன் முதல் அம் மரபு தொடர்கின்றது. அவர்களை இரும்பொறை மரபினர் என்பர்.

அந்துவஞ் சேரல் இரும்பொறையின் மகன் செல்வக்கடுங்கோ வாழியாதன். அவன் வீரனாகவும் பக்தனாகவும் விளங்கினான். அவன் அரசனாக இருந்தும் தாமரை இலையும் தண்ணீரும்போல் பற்றற்று வாழ்ந்தான்.

செல்வக் கடுங்கோ வாழியாதனுக்கு முன் அரசனாக இருந்த ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் ஆரியநாட்டுத் தண்டாரணியத்தின்மேல் படை யெடுத்துச் சென்றான். அவனுக்குத் தமிழ்நாட்டில் எதிர்ப்பில்லை என்று தெரிகிறது. செல்வக் கடுங்கோ அரசனானதும் சோழன் அவனை எதிர்க்கத் தலைப்பட்டான். அவனை வெல்ல வாழியாதன் செல்லவில்லை.

வீரவுரை: செல்வக் கடுங்கோ தன் படைத் தலைவர்களை அழைத்து, "படைத் தலைவர்களே, சோழர்கள் அடிக்கடி துன்பங் கொடுக்கின்றனர். அவர்களை அடக்குவதே நம் பரம்பரைத்

தொழிலாகி விட்டது. சோழருள் ஒருவன் நம் நாட்டின் ஒரு பகுதியைத் தாக்குகின்றான். பிறந்த நாடு சுவர்க்கத்தினும் சிறந்தது. தாய் நாட்டிற்காக நீங்கள் சிந்தும் ஒவ்வொரு துளி இரத்தமும் அயிரை மலைபோல் நிலைத்து உங்கட்குப் புகழைத் தரும். வேள்வி பல செய்தும் அறங்கள் பல புரிந்தும் அடையும் சுவர்க்கத்தை ஒரு வீரன் தன்னுயிரைப் போர்க்களத்தில் விட்டு ஒரு கணத்தில் பெறுகிறான். மேலும், அவன் நடு கல்லில் தெய்வமாக நின்று அரசர் முதலானோரால் வணங்கப்படுகின்றான். நீங்கள் போர்க்களமென்னும் புகழிடஞ் சென்று, அச் சோழனைப் பிடித்து வந்து என் கண் முன் நிறுத்துங்கள்" என்று தன் முகஞ் சிவக்க உடல் துடிக்கக் கூறினான்.

படைத்தலைவர் அவனை வணங்கி, "பொருனையாற்றின் நீர் குடித்துச் சேரநாட்டின் உணவினை உண்டு வளர்த்த இவ் வுடலை அந் நாட்டின் மானத்திற்காகவே கொடுப்போம். நாம் வழிபடும் கொற்றவை மேல் ஆணை இது. போகிறோம், போர்க்களம்" என்று படைத்தலைவர் போர்க்களஞ் சென்றனர்.

போர்க்களம்: வீரர்களின் ஊனையும் குடரையும் உண்ணக் கருதிக் கழுகுகளும் பருந்துகளும் பின்சென்றன. வீரக் கழலணிந்த வேந்தனுடைய யானைகள் மலைகள்போல் சென்றன. பகை மன்னரைப் புறங்கண்ட அரசனுடைய குதிரைகள் கொடிய வில்லில் தொடுத்து விட்ட அம்புகள்போல் சென்றன. காற்றால் நிலை குலைந்த கருமேகம் போல் சென்றன காலாட்படைகள். அலங்கரிக்கப்

பட்ட தேர்கள் நிலத்தைக் கிழித்துக்கொண்டோடின; ஓடிச் சோழனைத் தாக்கின. சோழன் படைகளும் எதிர்த் தாக்குதலை நடத்தின. இறுதியில் ஆயுதங்களைப் போர்க்களத்தில் போட்டு விட்டு ஓடின சோழன் படைகள்.

நல்லியல்பு: முற்காலத்து மன்னர்கள் வேள்வி செய்வதை ஓர் அறமாகக் கருதினர். பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்ற பாண்டியனும் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி என்ற சோழனும் தாம் தாம் செய்த வேள்விகளால் தம் பெயர்களுக்கு முன் அடைமொழி பெற்றிருக்கிறார்கள். வேள்வியைக் குறிக்கோளாகக்கொண்டு அரசர்கள் அறங்கள் பல செய்வர். செல்வக் கடுங்கோ வாழியாதனும் ஒரு பெரு வேள்வி செய்தான். மற்றும் யாகம் பண்ணின காலத்தில் செய்யாதிருந்த அறங்களையும் செய்து முடித்தான். நிலமில்லாதோர்க்கு நிலம் கொடுத்து உழுதொழிலுக்கு உதவி செய்தான். மரம் செடி கொடிகளை நட்டு வளர்க்கவும் சாலைகளும் சோலைகளும் அமைக்கவும் அவன் பொருள் கொடுத்தான். ஏழைகள் இருக்க வீடுகளும் அவர்கள் உண்டு களிக்க அறக்கூழ்ச் சாலைகளும் அமைத்தான்; சத்திரங்களும் கோயில்களும் கட்டினான்; ஏரி குளங்களைப் பழுது பார்த்தான். புலவர்களுக்குப் பொன் கொடுத்துப் போற்றினான்.

மாய வண்ணனைப் பெற்றான்: "விறகில் தீயும், பாலில் நெய்யும் மறைந்திருப்பன. இறைவன் எல்லாப் பொருள்களிலும் மறைந்திருக்கிறான். மக்கள் உடம்பின் பயன் உடம்பில் மறைந்திருக்கும் உயர்தனிப் பொருளைக் காண்பது" என்று

செல்வக் கடுங்கோ வாழியாதன் திருமாலிடத்துச் சிந்தையைச் செலுத்திப் பாடுவான்; உருகுவான்; உருகித் தன்னை மறந்து நிற்பான். "மெய்ம்மையாம் உழவைச் செய்து. விருப்பெனும் விதை விதைத்துப் பொய்ம்மையாம் களை பிடுங்கிப் பொறுமை எனும் நீரைப் பாய்ச்சி மெய்யறிவாம் வேலி யிட்டுப் பக்தியாம் பயிர்வளர்த்துத்" திருமாலைத் தன் மனத்தில் வீற்றிருக்கச் செய்தான். அருள் உருவாம் திருமாலுக்கு நித்திய நைமித்திகங்கள் முட்டின்றி நடக்க ஒகந்தூர் என்ற ஓர் ஊரைக் கொடுத்துத் தான் தன் புரோகிதனைவிட அறநெறி யறிந்து செழித்த உள்ளத்தோடு குற்றமறச் செங்கோல் செலுத்தினன்.

கபிலருக்குப் பரிசு: கடையெழு மாணிக்கங்களுள் (வள்ளல்களுள்) பாரியும் ஒருவன். மூவேந்தரின் சூழ்ச்சியால் அவன் உயிர் நீத்தான். கபிலர் வருந்தினர், அப் பாரியைப் போல் சிறந்த வள்ளல் யார் இருக்கின்றனர் என்று; பாரியின் வீர விளக்கமும் கொடைச் சிறப்பும் செல்வக் கடுங்கோ வாழியாதனிடம் உள்ளனவாகக் கண்டு அவனிடஞ் சென்றார். அவன் அவருக்கு இருக்கையளித்து உபசரித்தான். செல்வக் கடுங்கோவின் பேராண்மையும் பெருங் கொடையும் கபிலரின் உள்ளத்தை உருக்கிப் பத்துப் பாடல்களாகப் பொங்கி வழிந்தன. அப் பாடல்கள் பதிற்றுப்பத்தின் ஏழாம் பத்தாக அமைந்துள்ளன. அருளாலும் பொருளாலும் விளங்கிய அரசன், "நூறாயிரம் பொற்காணம் சிறு கொடையாகப் பெற்றுக் கொள்ளுங்கள்" என்று கபிலருக்குப் பரிசாகக் கொடுத்தான். அவ்வளவு பெருந்தொகையை அந்த அரசன் என்னவென்று

சொல்லிக் கொடுத்தான்? ‘சிறு கொடை’ என்று சொல்லிக் கொடுத்தான்.

அதுமட்டுமன்று! ‘நன்ரு’ என்னும் மலைமேல் ஏறி நின்று தன் கண்ணிற் கண்ட நாடெலாம் அப் புலவருக்குக் காட்டி, ‘ஏற்றுக் கொள்க’ என்று வேண்டிக் கொடுத்தான் அவ் வேந்தன். அவனது திருந்திய மனப் பண்பு வாழ்க!

செல்வக் கடுங்கோ வாழியாதன் இருபத்தைந் தாண்டு செங்கோற் செலுத்தினன்.

9. பெருஞ் சேர லிரும்பொறை

கழுவுள் போர்

தமிழ்ப் பெருமை: நமது தமிழணங்கு இலக்கிய இலக்கணச் செல்வங்களை உடையவளாய் இருப்பதற்குக் காரணம், அரசர்களும் செல்வர்களும் தமிழையும் தமிழ்ப் புலவர்களையும் போற்றி வந்தமையேயாம். அவர்கள் புலவர்களின் அறிவு நிலத்தில் அன்பு நீர் பாய்ச்சிப் பொருள் எரு விட்டுத் தமிழ்ப் பயிரிட்டார்கள். அத் தமிழ் ஒன்று பலவாகக் கிளைத்து இன்றும் வளர்கின்றது. இறைவன் மும் மூர்த்தியாய் இருப்பதுபோல், தமிழணங்கும் முத்தமிழின் வடிவமாய்த் திகழ்கின்றுள். ஆயினும் தமிழணங்கு இறைவன் பின் செல்லவில்லை. இறைவன் தமிழணங்கின் பின் சென்றுன். முடிமன்னர் மூவரும் தமிழைத் தம் உயிரினும் சிறந்ததாகக் கருதினர். சில மன்னர்கள் தொண்டர்களாகவும் வேறு சில மன்னர்கள் தமிழ் மாணவர்களாகவும் மாறினர். தொண்டர்களாக மாறியவர்களுள் ஒருவன் **பெருஞ் சேர லிரும்பொறை.**

சேரநாட்டு மன்னன்

செல்வக் கடுங்கோ வாழியாதன் மகன் பெருஞ் சேர லிரும்பொறை. வாழியாதனுக்குப் பின் பெருஞ் சேர லிரும்பொறை சேரநாட்டு மன்னனுகிச் செங்கோற் செலுத்திஞன். அவன் தன் முன்ஞேர் போலவே அறிவிலும் ஆற்றலிலும் சிறந்திருந்தான்.

போர்: கழுவுள் என்பான் ஒரு சிற்றரசன். அவன் இடையர்களுக்குத் தலைவன்; காமூர்க்கு அரசன். அவன் பெருஞ் சேர லிரும்பொறை ஆட்சிக்கு வந்ததும் திறை கொடுக்க மறுத்தான். அதனால் பெருஞ் சேர லிரும்பொறை அவனோடு போர் தொடுக்க நேர்ந்தது. அவன் தன் நால்வகைப் படைகளோடும் போருக்குப் புறப்பட்டான். படைகள் போர் வேட்கையோடு காமூரை யடைந்தன. அகழி சூழ்ந்து, மதிலுயர்ந்து உறுதி வாய்ந்த கோட்டையைத் தகர்க்கப் பெருஞ் சேர லிரும்பொறை திட்டமிட்டான்.

அகழியில் கொடிய முதலைகள் மிகுதியாக உள்ளன. பலகையோடு சேர்த்துச் செய்யப்பட்ட ஏணியை மதில்மேற் சார்த்தி, பாம்பும் உடும்பும் போல் சேரன்வீரர் ஏறினர். அவர்களைப் பகைவர்கள் மதில்மேலிருந்து வெட்டினர். அகழியின் நீல மணிபோன்ற நீர் உதிரப் பெருக்கினால் செம்பவளம் போல் மாறிற்று. மதிலிலிருந்து குருதி மழைநீர்போல் ஒழுகிற்று. கழுவுளின் வீரர்கள் மதில்மீதிருந்து குதித்துக் கோட்டைக்குள்ளோடினர். மலை உச்சியிலிருந்து நிலத்தில் இரையைக் கண்டு பாயும் பருந்தின் கூட்டம்போல் பெருஞ் சேரல் இரும்பொறையின் வீரர்கள் மதில்மேலிருந்து கோட்டைக்குள் குதித்தனர். கழுவுள் என்னும் அரசனுக்கும் பெருஞ் சேர லிரும்பொறைக்கும் கோட்டைக்குள் கொடும்போர் நடந்தது. சேரலின் அம்பொன்று கழுவுள் என்பானின் மார்பிற் பாய்ந்து இதயத்தைத் தின்று, இரத்தத்தைக் குடித்து, உயிரைச் சூறை யாடியது. சேரன் அந்தக் கோட்டையை இடித்துக் கழுதை ஏர் பூட்டி

உழுது வெள்ளை வரகினை (சோழியை) விதைத்தான்.

வெற்றி வீரர்க்குக் கன்றும் பசுவும்

கழுவுள் என்னும் ஆயர் தலைவனுக்குக் குடங் குடமாகப் பால் கறக்கும் பசுக்களும் துள்ளி விளையாடும் கன்றுகளும் மிகுதியாக உண்டு. அவற்றைப் பெருஞ் சேரல் கைப்பற்றித் தனக்கு வெற்றி தந்த வீரர்களுக்குக் கொடுத்து மகிழ்ந்தான். வீரர்கள் அவற்றைப் பெற்றுத் தங்களுக்கென்று வைத்துக் கொள்ளாமல், மற்றவர்க்குக் கொடுத்து மகிழ்ந்தனர். வணங்காதவரும் வணங்கினர்.

கழுவுள் என்பான் உயிர் துறந்ததும், ஆயர்கள் அஞ்சிக் காமூரை விட்டுச் சேரனுக்குத் திறை கொடாத குறும்பர் நாட்டை அடைந்தனர். குறும்பர்கள் திடுக்கிட்டனர். 'பெருஞ் சேர லிரும் பொறை தங்களை எவ்வாறு துன்புறுத்துவானோ?' என்று நடுங்கினர். சேரனுக்குத் திறை கொடுப்பதைத் தவிர வேறு வழி யில்லை. 'விதி யாரை விட்டது' என்று அவர்கள் புதிதாகத் தேடிய பொருளோடு முன்னே தேடிய பொருளையும் திறையாகக் கொண்டுவந்து பெருஞ் சேரலின் அடியில் வைத்து வணங்கினர். பேய் தனக்குப் பலி கொடுத்தபோது, தான் பிடித்தவ ளுயிரைக் கவராமல் பலி கொண்டு நீங்குவதுபோலக் குறும்பர் உயிரைக் கொள்ளாமல், அவர் கொடுத்த திறை கொண்டு மகிழ்ந்து சென்றான் பெருஞ் சேர லிரும் பொறை. கடுமையாகக் கொட்டுகின்ற குளவியின் கூண்டினைத் தீண்டிய சிறுவரைப்போல் குறும்பர்

ROJA. MUTHIAH
ARTIST

வருந்தினர். இன்பம் ஒரு புறம், துன்பம் ஒரு புறம்; இது உலகின் இயற்கை.

வெற்றிமேல் வெற்றி

ஓரியுடன் போர்: அதியமான் என்பவன் தகடூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட மன்னன். அவன் திருமுடிக்காரியின் திருக்கோவலூரை முற்றுகையிட்டான். திருமுடிக்காரியும் எதிர்த்துப் போர்செய்தான். அங்கு நடந்த போர் பெரும் போர். அதில் திருமுடிக்காரி புறங்காட்டியோடினன். ஓடினவன் உள்ளம் அமைதியாக இல்லை. தான் தோற்றதை நினைக்க அவனுள்ளம் சோறுபோல் கொதித்தது. அவன் தன் நண்பனுகிய பெருஞ் சேரல் இரும்பொறையை யடைந்தான்; நடந்ததைக் கூறினன். அதைக் கேட்ட பெருஞ் சேர லிரும்பொறையின் கண்களும் முகமும் சிவந்தன. திருமுடிக்காரி பெருஞ் சேர லிரும் பொறையைத் தனக்குத் துணையாக வருமாறு வேண்டினன்.

"நண்ப! நான் உனக்குத் துணையாக வந்து அதியமானேடு போர் புரிவேன். ஆனல் முன்னதாக அவனது நண்பனுகிய ஓரியைத் தாக்க வேண்டும். ஓரி என் நாட்டின் அருகில் இருக்கிறன். நாம் அதியமானது தகடூர் மீது போருக்குச் சென்றல் அருகிலிருக்கும் ஓரி என் நாட்டைத் தாக்கக்கூடும். மேலும் நாம் ஓரியைத் தாக்கினல் அவனது நண்பனுகிய அதியமான் அவனுக்குத் துணையாக வருவான். அப்போது அதியமானை நாம் எளிதில் வென்றுவிடலாம். இதுவே எனது ஆராய்ந்த கருத்தாகும்" என்றன் பெருஞ் சேர

லிரும்பொறை. அதற்குத் திருமுடிக்காரியும் உடன்பட்டான்.

வல்வில்லோரி பெரு வீரன்; கடையெழு வள்ளல்களில் ஒருவன்; கொல்லிமலைக்கும் அதனைச் சார்ந்த நாட்டிற்கும் அரசன்; பொய்யொழுக்க மற்ற புலவர்களின் பாமாலை அணிந்தவன். அவனைத் தாக்கத் திருமுடிக்காரியும் பெருஞ் சேர லிரும்பொறையும் புறப்பட்டனர். இருவரும் பெரும் படையுடன் கொல்லிமலையைத் தாக்கினர்.

வல்வில்லோரி அதியமானைத் தனக்குத் துணை யாக அழைத்தான். அதியமான், சோழ பாண்டி யரைத் தனக்கு துணையாக நாடினன். அவர்களும் பெரும் படையுடன் சென்றனர். அவர்கள் மூவரும் வல்வில்லோரியும் ஒரு பக்கமும், பெருஞ் சேர லிரும்பொறையும் திருமுடிக்காரியும் மற்றொரு பக்கமும் நின்று, வரிப்புலிகளும், பிடரிச் சிங்கங் களும் போர் புரிவது போன்று போர் புரிந்தனர். அவர்கள் போர் புரிந்த இடத்தைப் போர்க்களம் என்று சொல்வதைவிடப் பிணக்களமென்று சொல்வது பொருந்தும். வெண்ணிறக் கழுகுகள் குருதி படிந்து செம்பருந்துகள்போலத் தோன் றின. தேர்ச் சக்கரங்கள் பிணங்களிற் சிக்குண்ட தால் செல்லவில்லை. அதனல் தேரிற் பூட்டிய குதிரைகள் குதிக்க, அதனல் வீரர்களின் மூளைகள் சிதற, அவற்றைப் பருந்துகள் அடித்துச் சென்றன.

அந்தப் போரில் வள்ளல் வல்வில்லோரி விண்ணுலகத்திற்கு விருந்தாகச் சென்றான். சோழர், பாண்டியர் தோற்றேடினர். அதியமான்

தனது தகடூர்க் கோட்டைக்குள் மறைந்து கொண்டான். அவனைத் தொடர்ந்து சென்று தகடூர்க் கோட்டையை முற்றுகை யிட்டான் பெருஞ்சேரல்.

ஔவை அதியமானுக்கு ஊக்கமூட்டக் கருதி, **“மலைக் குகையில் வாழும் புலி சீறுமாயின், அதனை எதிர்த்து நிற்க வல்ல மான் கூட்டமும் உண்டோ? இல்லை யன்றோ? அது போலப் பெரு வீரனான நீ போர்க்களஞ் சென்றால் உன்னை எதிர்த்து நிற்கும் வீரரும் உண்டோ?”** என்று கூறினார்.

அதைச் சிந்தித்தான் அதியமான். உடனே அவன் கோட்டையை விட்டு வெளியே சென்று, பெருஞ் சேர லிரும்பொறையை எதிர்த்தான். இரு வர் பக்கமும் பல வீரர் உயிர் துறந்தனர். அதிய மானின் உடல் பெருஞ் சேரலின் அம்புகளால் துளைக்கப்பட்டது. அதியமான் மண்மீது சாய்ந் தான். அவ் வீர வள்ளலைத் தேவர்கள் தங்கள் நாட்டிற்கு அழைத்துச் சென்றனர்.

பெருஞ் சேர லிரும்பொறைதன் விற்கொடியை யும் வெற்றித் தூணையும் தகடூரில் நாட்டினான். தன் உடலில் ஆயுதங்கள் பாய்ந்து ஈரம் புலர்ந்திருக்கும் வீரப் புண்களைப் பார்த்தும், அவற்றால் தனக்குக் கிடைத்திருக்கும் இரு பெரும் வெற்றிகளை நினைத்தும் பெருமிதங் கொண்டான். தகடூரை வென்றதனால், ‘தகடூ ரெறிந்த பெருஞ் சேர லிரும்பொறை’ எனப் பட்டான். வெற்றி முரசம் முழங்க, வீரர் ஆர வாரிக்க, அவன் சேர நாட்டை யடைந்தான். அந் நாட்டு மக்கள் மகிழ்ந்தனர். தான் நாட்டில் இல்லாத காலத்தில் பார்க்கவேண்டிய அரசியல் செயல்களில் அவன் ஈடுபட்டான்.

இரு புலவர்க்கும் பெரும் பரிசு

மோசிகீரனுர்: மோசிகீரனுர் என்பவர் சிறந்த புலவர். அவர் கல்விக் கடலாகவும் வறுமைக்குத் தாயகமாகவும் விளங்கினுர். எந்தப் புலவர்தாம் செல்வராய்ப் பல நாள் இருந்தனர்? அரசர்களிடமும் செல்வர்களிடமும் புலவர்கள் பெரும்பொருள் பெற்றது உண்மைதான். இருந்தும் என்ன பயன்? அவர்கள் தங்களுக்கென்று அப் பொருளை வைத்திருந்தால்தானே! சுற்றத்தார்க்கும் இரவலர்க்கும் மற்றுமுள்ள நல்லறச் செயல்களுக்கும் முன்னே பட்ட கடனுக்கும் கொடுத்து விடுவார்கள். அதனுல் புலவர்கள் சில நாள் குபேரர்: பல நாள் குசேலர்.

புலவர் புறப்படல்: மோசிகீரனுர் பெருஞ் சேர லிரும்பொறையின் பெருங் கொடையையும் பேராற்றலையும் கேள்விப்பட்டார். அவனைக் காண வேண்டும் என்ற எண்ணம் நிலத்தை நோக்கி வரும் மலையருவிபோல் விரைந்தது. ஒரு நாள் அவர் அவனைக் காணப் புறப்பட்டார். அடர்ந்த காடுகள், உயர்ந்த மலைகள், விரைந்தோடும் ஆறுகள் இவற்றைக் கடந்து வஞ்சிமா நகரை அடைந்தார்.

முரசுறை கடவுள்: வீரமுரசு, தியாகமுரசு, நியாயமுரசு என அரசர்க்கு மூன்று முரசங்கள் உண்டு. புலியோடு போர்செய்து இறந்த காளையின் தோலை, மயிர் சீவாமல் முரசுக்கென்று குடையப்பட்ட மரத்தில் வாரினுல் இழுத்துக் கட்டியிருப்பர். அதற்கு மயிலின் பீலியும் மாலையும் சூட்டப்பட்டிருக்கும். முரசில் கடவுள் இருப்பதாகக் கருதி அதனை வழிபட்டனர் முன்னோர்.

அவர்கள் முரசினை வணங்கிய முறையே தனி. கடிய ஒலி விண்ணடைந்து அதிரும்படி கடுஞ் சினத் தோடு மந்திரம் முழங்குவர். கருங் கண்ணுடைய பேய்மகள் கையுதறி நடுங்க, முரசுறை கடவுளைப் பூசிக்கும் உயர்ந்தோன், இரத்தம் கலந்த பலியை ஏந்தி நிற்பான். அப் பலியை எறும்பு தின்னுமல் காக்கையும் பருந்தும் தின்னுமாயின் போரில் வேற்றி யுண்டாவதற்குரிய நன்னிமித்தமாகக் கருதிப் போருக்குச் செல்வர்.

புலவர் கண் துயில்: முற்கூறியவற்ருல் முரசை அரசர்கள் உயர்வாகக் கருதிய செயல் நன்கு விளங்கும். அரசனில்லாத அரியணைபோல் முரசு கட்டில் வறிதே இருந்தது. அதன்மீது எண்ணெய் நுரையை முகந்தாற்போல மென் மலர்கள் சொரியப்பட்டிருந்தன. மோசிகீரனர் அங்கே சென்ருர். அது முரசுகட்டில் என்று அவருக்குத் தெரியாது. அதனல் அவர் அதன்மீது படுத்துக் கண்ணுறங்கினர். முரசு கட்டிலின்மேல் பிறர் உறங்குவது பெருங் குற்றமாகும். உறங்கு வோர் கொலைக் குற்றத்திற்கு உரியவராவர். வழி நடந்த களைப்பாலும் பசியின் வேதனையாலும் அவர் முரசுகட்டில் என்று உணரவில்லைபோலும்! 'மானம், குலம், கல்வி, கொடை, அறிவுடைமை, தானம், தவம், ஊக்கம், ஆசை முதலிய பத்தும் பசிவந்திடப் பறந்துபோம்.'

கவரி வீசினன்: பெருஞ் சேர லிரும்பொறை முரசு கட்டிலிருக்கும் அப் பக்கம் தற்செயலாய்ச் சென்ருன். தூரத்தில் அவன் செல்லும்போது யாரோ முரசுகட்டிலில் உறங்குவதுபோல் தேரிந் தது. அவன் கை உடைவாளை உருவிற்று. அவன்

முகஞ் சிவந்தது. அவன் ஆண் சிங்கம்போல் விரைந்து சென்றான். அவனுட னிருந்தவர்கள், 'முரசு கட்டிலில் தூங்குவோன் தலை ஒரே வேட்டினால் கீழே உருளும்' என்று அஞ்சினர். அரசன் சென்று முரசு கட்டிலில் தூங்குவோரைச் சிந்தனையைச் சிதறவிடாமல் உற்று நோக்கினான். அவர் புலவரென்று அறிந்தான். வாள் உறைக் குள் சென்றது. முரசுப் பூசைக்கென்று அமைந்த மங்கலப் பொருள்களுள் ஒன்றாகிய வெண்சாமரை அருகே இருந்தது. வாள் பிடித்த கையினால் அந்தச் சாமரையை யெடுத்துப் புலவர்க்கு இன்பம் தோன்ற மெல்ல வீசினான். குளிர்ந்த காற்று, புலவர்மேல் பட்டது: கண்விழித்துப் பார்த்தார் புலவர்.

புலவர் புகழ்மாலை: அவர் உடனே திடுக் கிட்டு எழுந்து பெருஞ் சேரலின் கையைப் பிடித்துக் கொண்டார். சிந்தித்துப் பார்த்தார். அப்போது தான் புலவர் தம் குற்றத்தை உணர்ந்தார். பெருஞ் சேரலின் பேரருளாகிய மதியத்தைக் கண்டு, புலவரின் உள்ளப் பெருங் கடல் உவகையால் பொங்கி ஒரு பாடலாக வழிந்தது.

அப்பாடலின் கருத்து: "உன்னுடைய வீர முரசம் நீராடி வரப் போயுள்ளது. அது வருவதற்கு முன்னே அம் முரசு கட்டிலிலே அறியாமல் ஏறித் தூங்கினேன். நீ தமிழருமை அறிந்தமைக்குத் தூங்கிய என்னை இரு துண்டாக வெட்டாமல் விட்டு விட்டது போதும். என்னிடம் நெருங்கி வந்து மத்தளம் போன்ற தோளைத் தூக்கிச் சாமரத்தால் குளிர வீசிப் பிறர்க்கு உதவி செய்தல் இவ் வுலகத் துப் பெரும் புகழுடையோர்க் கல்லாது விண்ணுல

கத்துத் தேவர்களுக் கில்லை என்பதைக் கேள்விப் பட்டிருப்பதனுலேயோ என்னவோ? அதற்குக் காரணம் யாதோ?"

பெருஞ்சேர லிரும்பொறை புலவர் தன்னைப் புகழ்ந்ததற்கு நாணி, "புலவரே! நீர் தெய்வத் தமி ழறிந்து ஒழுக்க வழியிற் செல்பவர். அதனுல் என் கடமையைச் செய்தேன்" என்று கூறிப் பெரும் பரிசி லளித்தான். புலவர் அரசனைப் புகழ்ந்து மகிழ்ந்து சென்ருர். புலவர்க்குக் கவரி வீசியது சிறுமை ஆகாமல் பெருஞ் சேரல் என்ற பெருமை அம் மன்னனுக்குக் கிடைத்துள்ளது.

அரிசில்கிழார் பரிசு: வெண்பட்டு நூலில் பல நிறத் தூய மணிகளைக் கோத்தாற்போல் பெருஞ்சேர லிரும்பொறையின் அறிவு, ஆற்றல், அறம் முதலியவற்றைத் திரட்டிப் பத்துப் பாடல் களில் அமைத்துப் பாடினுர் அரிசில்கிழார். அப் பாடல்கள் பதிற்றுப்பத்தின் 8-ஆம் பத்தாக அமைந்துள்ளன. அரசன் மகிழ்ந்து தன் கோப் பெருந்தேவியோடு வெளியில் சென்று, "புலவரே, எனது அரண்மனையில் உள்ளவற்றை யெல்லாம் கொள்க" என்று ஒன்பது நூருயிரம் பொன் கொடுத்தான். அது சிறிய பரிசு என்று பெருஞ் சேரலுக்குத் தோன்றியது. பின் புலவரைப் பார்த்து, "அரிசில் கிழாரே, எனது அரசு முழுமை யையும் அதன் உரிமையையும் உமக்குக் கொடுத் தேன்; நீர் ஏற்றுக்கொள்க" என்று கூறினுன்.

"அரசே உமது செங்கோல் வாழ்க. நீ கொடுத்த அரசுரிமையைத் திரும்ப நீ பெற்றுக் கொள்ள வேண்டுமென்று உன்னை யாசிக்

கின்றேன்" என்று அரிசில்கிழார் கூறி அந்த ஆட்சியை அவனுக்கே கொடுத்துவிட்டார். "சேர நாட்டு மன்னனாக இருக்க நீர் விரும்பாவிடினும் அமைச்சராக இருக்க உம்மைக் கேட்டுக்கொள்ளு கிறேன்" என்றான் பெருஞ் சேர லிரும்பொறை.

அரிசில்கிழார் அரசனது விருப்பத்திற் கிணங்கி, அமைச்சராக இருந்து சேரநாட்டுக்குச் செய்யவேண்டிய நன்மைகளைச் செய்தார். பெருஞ் சேர லிரும்பொறை பதினேழாண்டு நீதியோடு ஆட்சி புரிந்தான்.

ROJA MUTHIAH
47, HOSPITAL STREET
KOTTAIYUR-623 106
P. M. DIST - TAMIL NADU - INDIA

10. இளஞ் சேர லிரும்பொறை வெற்றி

கலைஞரைக் காத்தல்: நம் நாட்டு மன்னர்கள் புலவர்களையும் பாணர்களையும் கூத்தர்களையும் ஆதரிப்பதில் பெருங் கவலை கொண்டனர். புலவர்கள் நாட்டிற்கு நல்லொழுக்கத்தைக் கற்பித்து முத்தமிழ்க் கலையை வளர்த்தனர். பாணர்கள் நல்லிசை பாடி இன்பந் தந்து இசைக் கலையைப் பெருக்கினர். கூத்தர்கள் நடனமாடி நாட்டியக் கலையை வளர்த்துக் கண்களுக்கும் காதுகளுக்கும் இன்பந் தந்தனர். கலைஞர்கள் நாட்டின் புதை பொருள்; இன்பச் சிகரம். அவர்களுக்குக் கவலை இல்லையேல் கலை வளரும். அவர்கள் வயிற்றுக் கும்பியின் பொருட்டுப் பொருள் தேடத் தொழில் துறைகளில் இறங்கினுல் கலை வளர்ச்சி தடைப்படும். கலை வளர்ச்சி தடைப்படுமாயின் அமைதி குன்றி இன்பம் தீய்ந்து போம். கலைஞர்கள் வேறு தொழில் துறைகளில் ஈடுபடாம லிருக்க அவர்கட்கு அரசர்கள் அரும் பெரும் பொருள்களையும் யானைகளையும் கொடுத்தார்கள்; விருது தந்தனர்; பெறற்கரிய அரசினையும் அளித்து விட்டனர். அவ்வாறு கொடுத்த அரசர்களுள் ஒருவன் இளஞ் சேர லிரும்பொறை. அவனைக் குடக்கோச் சேர லிரும்பொறை என்றும் கூறுவர்.

பல மன்னரின் எதிர்ப்பு: அவனது தந்தை குட்டுவன் இரும்பொறை. தாய் வேண்மாள் அந்துவஞ் செள்ளை. பெருஞ் சேர லிரும்பொறைக்

குப் பின் இளஞ் சேர லிரும்பொறை அரசனானன். தமிழ் மன்னர் பலர் ஒன்றுகூடி அவனை எதிர்த் தனர். எதிர்ப்பு என்றால் சொல்லளவில் எதிர்ப்பன்று; செய்கையளவில் பெரும் எதிர்ப்பு. எதிர்ப்பைக் கண்டு இளஞ் சேரல் சற்றும் இளைக்க வில்லை. 'ஆறிலுஞ் சாவு நூறிலுஞ் சாவு' என்று பகைவர்களை வெல்லத் துணிந்தான்.

பெரு வெற்றி: முடி மன்னராம் சோழ பாண் டியரும், விச்சி என்னும் குறுநில மன்னனும் பொத்தியை யாண்ட பெருஞ் சோழனும், பழையன் மாறன் என்னும் குறுநில மன்னனும் இளஞ் சேர லிரும்பொறையை எதிர்த்தனர். 'என் பகைவரைக் கொன்று அவர்களது பொருளைக் கொணர்ந்து வஞ்சி மக்களுக்குக் கொடேனாயின் செந்தமிழ்த் தாயை வஞ்சித்தவனாவேன்' என்று வஞ்சினம் கூறி இளஞ் சேர லிரும்பொறை போருக்குப் புறப்பட்டான். கூற்றுவனும் கையுதறி நடுங்கும் படி போர் நடந்தது. போர்க்களம் புலால் நாற்றம் வீசியது. போர்க்கள மகள் அந்தக் கோரப் போரைப் பார்க்கச் சகியாதவளாய் மாண்ட வீரர்களின் உடல்களால் தன் முகத்தினை மூடிக் கொண்டாள். பாசறைகளிலெல்லாம் போரில் புண் பட்ட வீரரின் கோரக் காட்சி பார்க்க முடியாததா யிருந்தது. இளஞ்சேர லிரும்பொறை, பகைவர் பலரைக் கொன்று குவித்தான. காவற் காடும் மதில்களும் சூழ்ந்த கோட்டைக்குள் பகைவர் சிலர் ஓடி மறைந்தனர்.

கட்டு வேலி சூழ்ந்த காவற் காட்டினைத் தீக்கு இரை யாக்கினான் இளஞ்சேரல். ஐந்து மதில்களை யும் இடித்துத் தரை மட்ட மாக்கினான். அந்த ஐந்து

மதில்களாற் சூழ்ந்த கற்கோட்டை அவனுடைய யானைகளால் தவிடு பொடி யாயிற்று. பகைவரிடம் கைப்பற்றிய பொருள்களை அவன் வஞ்சினம் கூறியதுபோல் தன் தலை நகர்க்கு யானைகளின்மேற் கொண்டு சென்று கொடுக்க வேண்டியவர்க்குக் கொடுத்தான்.

பாலும் பழமும்

புலவர் நிலை: இளஞ் சேர விரும்பொறை வீரனாக மட்டும் விளங்கவில்லை. அவன் தமிழணங்கின் முதல் மகனாகவும் புலவர்கட்குச் செவிலியாகவும் விளங்கினான். அவன் புலவர்களைப் போற்றுகின்ற நற்செயலைப் பெருங்குன்றூர் கிழார் கேள்வியுற்றார். அவர் இன்பக் கலைக்கும் வருத்தும் வறுமைக்கும் கோயிலாக இருந்தார். கலைச் செல்வி இருக்கு மிடத்தில் பொருட் செல்வி இருப்பது அரிது என்று உலகோர் சொல்வார்களே; அதற்கு எடுத்துக் காட்டாக இருந்தார், பெருங் குன்றூர் கிழார். அவரது இல்லில் எறும்பும் எடுக்க ஒரு நொய்கூட இல்லை என்று அவரது வறுமையை ஒரு வாக்கியத்தால் சொல்லி விடலாம்.

இளஞ் சேரலைக் காணல்: 'குடக்கோச் சேர லிரும் பொறை என்ற மன்னன் பெரும் கொடையாளியாம்! அவனைக் காண்பது நல்லது' என்று அவர் முடிவு செய்து அவனைக் கண்டார். இளஞ் சேர லிரும்பொறை மலர் முகம் காட்டி இன்சொற் கூறி வரவேற்றான். அவனது கொடையையும் ஆற்றலையும் அடுக்கிக் கவி பல பாடினார் புலவர். அரசன் அவற்றைச் சுவைத்து இன்புற்றான். அவன் அருங்கலை விநோதனாக

இருப்பதை அறிந்த புலவர் மேலும் பல பாடல்கள் பாடினர். இலவ மரம் பழுக்கும். பழந் தின்னலாம் என்று பார்த்திருக்கும் கிளிபோல் பல நாட்கள் காத்திருந்தார் புலவர். பயனில்லே. புலவருக்கு அரண்மனை விருந்தும் அரசனுக் கருகில் ஆசனமும் கிடைத்தன. பரிசு மட்டும் கிடைக்க வில்லை. நோயினுலும் பசியினுலும் வருந்தும் அவரது கற்பரசியும், நாள்தோறும் உணவின்மையால் எலிகள் மாறிமாறித் தோண்டிய பழஞ் சுவருள்ள வீடும், பல முறை சுவைத்தும் பால் வராமையால் பாலுண்ணுவதை மறந்த இளங் குழந்தையும் புலவரது மனக் கண்ணில் தோன்றின. அப்போது அவரது உள்ளம் வெடித்துவிடும்போல் இருந்தது. தலை சுழன்றது.

வறுமை ஓவியம்: பெருங்குன்றூர் கிழார் இளஞ் சேர லிரும்பொறையினிடம் சென்று, "வெற்றி விரும்பும் வேந்தே, நும்போல்வார் யாவரும் அருளில்லாம லிருப்பாராயின், எம்போல் வார் யாவரும் இவ் வுலகத்துப் பிறக்கக் கூடாது. குற்றமற்ற கற்புடைய என் மனைவி உயிருடனிருப் பாளாயின் என்னை நினையாம லிராள். அறனில் லாத காலன் அவளது உயிரைக் கொல்லத் துணியாமல் இறந்துவிட்டானே? என்னுயிர் ஒழிக. சொல்லத் தக்க நோயுடை மனையாளது துன்பந் தீர்க்க இப்பொழுதே விடைகொண்டேன். எனது வறுமையை முன்னே போகவிட்டுப் பின்னே யான் செல்கின்றேன். அரசே வாழ்க."

"கொடுஞ் சினமுடைய மேகத்திலுள்ள இடி பாம்பினது தலை துணிய எறியும் ஓசைபோல வீர முரசம் ஒலிக்க, மன்னர்கள் மாள, எதிர் நின்று

கொல்லும் புகழமைந்த அரசே, முன்நாள் பரிசில் என் கையிலே புகுந்தது போலக் காட்டி, மறுநாள் அது இல்லாதபடி செய்த நினது நிலைமைக்கு நீ நாணவில்லை. எனது செவ்விய நா வருந்தப் புகழ்ந்து நாள்தோறும் பாடப்பாட ஏற்றுக் கொண்ட நினது அகன்ற மார்பை வணங்கி வாழ்த்திப் போகின்றேன் யான். நாள்தோறும் உணவில்லாமையால் இடந்தோறும் இடந்தோறும் மாறி மாறித் தோண்டியதால் எலிகள் மாண்டு கிடக்கும் பழஞ் சுவருள்ள எனது பாழடைந்த வீட்டையும் பாலில்லாமையால் பல முறை சுவைத்துப் பாலுண்டலை வெறுத்த பச்சிளங் குழந்தையுடனே வறுமையுற்றிருக்கும் என் மனைவியையும் நினைந்து யான் செல்கின்றேன்" என்று மனமுருகி, உட லுருகிக் கூறித் தம் ஊருக்குப் புறப்பட்டு விட்டார், பெருங்குன்றூர் கிழார்.

கண்டோர் உருகினர்: அங்கிருந்தோர், 'நம் அரசரோ புலவர்களைத் தம் கண்போல் காப்பவர். ஆயினும் பெருங்குன்றூர் கிழாருக்கு ஒன்றும் கொடுக்கவில்லை. காரணம் யாதோ? ஏழைப் புலவர் கதி என்னகுமோ? பாவம்!' என்று மன முருகினர்.

வீடு எங்கே: புலவர் தம் ஊர் நோக்கிச் செல்கிறார். அவருக்கு முன்னே வறுமைக் கனல் செல்கின்றது. அவரது உள்ளம் கடலில் துரும்பென அலைகின்றது. 'இளஞ் சேர லிரும்பொறை மிகவும் நல்லவர்தாம். நான் அவரைக் குறைத்துக் கூறினேன். அதையும் பொறுத்துக் கொண்டான். அவரை வெறுத்தது வீண். எய்தவ னிருக்க அம்பை நோவதேன்?' என்று தம்

ஊராகிய பெருங் குன்றூரை அடைந்து வீட்டை அடைந்தார், புலவர். வீட்டில் ஒருவருமில்லை. திடுக்கிட்டார்.

மறைமுகப் பரிசு: அரசரால் அனுப்பப் பட்ட ஏவலாளருள் ஒருவர் ஓடிவந்து, "புலவரே, வணக்கம். அரசர் உங்கட்குச் சிறந்த மாளிகை ஒன்றைத் தந்திருக்கிறார். அதில் உம் மனைவியும் குழந்தையும் அரசரால் அனுப்பப்பட்ட ஏவலாட் கள் பலரும் இருக்கின்றனர். மேலும் நல்லோர் வாழும் வளமான ஊர்களையும் நிலங்களையும் கணக்கிட முடியாத பொருள்களையும் உமக்குப் பரிசாகத் தந்திருக்கிறார். வாருங்கள் அந்த மாளி கைக்கு" என்று அவரை அழைத்துச் சென்றனர். புலவர் மகிழ்ந்தார்.

பாமாலை புனைந்தான்: தினையளவு உதவி யையும் பனையளவாக நினைக்கும் பண்புடையவர்கள் புலவர்கள். இளஞ் சேர லிரும்பொறை செய்த பேருதவியைப் பெருங் குன்றூர் கிழார் அயிரை மலையளவாக நினைத்தாரோ! மேல்கட லளவாக நினைத்தாரோ! என்னவோ! சில நாட்கள் பெருங் குன்றூரிலிருந்து வஞ்சிமா நகரை யடைந்து இளஞ் சேரலைக் கண்டு அவன் செய்த உதவிக்குக் கைம் மாறாக அவன்மீது பத்துப் பாடல்களைப் பாடினார். அவை பதிற்றுப் பத்தின் ஒன்பதாம் பத்தாக உள்ளன. அரசன் புலவரின் புலமையை வியந்து மயங்காதவரும் மயங்குமாறு மகிழ்ச்சியினால் மறுபடி யும் முப்பத்தீராயிரம் பொற்காசு புலவருக்குக் கொடுத்தான். புலவர் மகிழ்ந்தார்.

கடவுளர் வழிபாடு: பெருஞ் சேர லிரும்பொறைக்குத் தன் முன்னோர் போலவே தெய்வ நம்பிக்கை இருந்தது. மந்திர முறைமையினல் தெய்வத்தை வழிபட்டான். அவனுக்குப் பல அமைச்சர்களுண்டு. அவர்களுள் ஒருவன் மையூர் கிழான் என்பவன். அவனைத் தன் புரோகிதனிலும் அறநெறி அறிவானகச் செய்தான் அவன்.

இளஞ் சேர லிரும்பொறை இந்திரன் நகரத்திலிருந்தும் சதுக்கப்பூதரைக் கொண்டுவந்து வஞ்சியுள் நிறுத்திச் சாந்தி செய்தான்.

சதுக்கப் பூதர் நாற்சந்தி கூடுமிடத்தில் இருப்பவர்; தீயவரைப் புடைத் துண்பவர்.

இளஞ் சேர லிரும் பொறை நீதிநெறியோடு பதினறுண்டு ஆட்சி புரிந்தான்.

11. மாந்தரஞ் சேர லிரும்பொறை

புகழுக்குரிய செயல்கள்: உலகத்தில் புகழை விரும்பாதவர் ஒருவருமில்லை. ஆனால் புகழுக்குரிய நற் செயல்களைப் பெரும்பாலோர் மேற்கொள்வ தில்லை. இருமையும் தரும் ஒழுக்கம்; அறிவைத் தரும் கல்வி; பெருமை தரும் செல்வம். எவ் வகைத் துயரினும் பிறழாத உறுதி, நீதி தவறாத ஆட்சி, வாளால் வெட்டினும் விழித்த கண் இமைக்காத வீரம்—இவை போல்வன புகழுக் குரியன. எனினும் நல்லொழுக்கமே மிகு புகழுக்கு முதன்மை யான தாகும்.

புகழ் பெற்றோர் சிலர்: ஒரு மரத்தில் பல்லா யிரம் அரும்புகள் தோன்றுகின்றன. தோன்றிய அரும்புகள் அனைத்தும் மலர்வ தில்லை. மலர்ந்தவை அனைத்தும் காயாவ தில்லை. காயானவை அனைத் தும் கனியாவ தில்லை. தோன்றிய அரும்புகளை நோக்கக் கனிகள் கணக்கில் மிகச் சிலவே. அது போல உலகில் தோன்றிய அரசர்களில் மிக மிகச் சிலரே புகழ்க் குன்றின் உச்சிப் படியை யடை கின்றனர்.

புகழ் மாலை: மேற்குக் கடற் கரையிலுள்ள தொண்டி என்னும் துறைமுகப் பட்டினத்தைத் தலை நகராகக் கொண்டு நல்லாட்சி புரிந்தவன் மாந்தரஞ் சேர லிரும்பொறை. கோச் சேரமான் யானைக் கட்சேய் மாந்தரஞ் சேர லிரும்பொறை என்றும் இவனைக் கூறுவர். கபிலர், குறுங்கோழி யூர் கிழார், பொருந்தில் இளங்கீரனார், கூடலூர்

கிழார் முதலிய சான்றோரின் புகழ் மாலை புனைந்த வன் அவன்.

அமைதியான ஆட்சி: 'சோற்றைச் சமைக்கும் நெருப்புடனே ஞாயிற்றினது வெம்மை யல்லது வேறு வெம்மை அறியார் அவனது குடிகள். இன்பந் தரும் பல நிற வான வில் அல்லது துன்பந்தரும் கொலை வில் அறியார்; கலப்பை யல்லது வேறு படைக்கலம் அறியார்' என்று குறுங்கோழியூர் கிழார் கூறுவதால் பகைவரின் அச்சமின்றி அந் நாட்டு மக்கள் வாழ்ந்தமை விளங்கும்.

பாண்டியனோடு போர்

நெடுஞ்செழியன்: இவன் பாண்டிய நாட்டை ஆட்சி புரிந்ததால் அரசர் வரிசையிலும், செந்தமிழ்ப் பாடல்கள் இயற்றியதால் புலவர் வரிசையிலும் போற்றப் பெற்றான். பாண்டிய நாடாம் நங்கையின் கணவனையும், செந்தமிழ்த் தாயின் சிறந்த மகனையும் விளங்கினன் என்று கூறுவது சிறப்புடைய தாகும். மாங்குடி மருதனார் இயற்றிய மதுரைக் காஞ்சி என்னும் நூலுக்குத் தலைவனும் இவனே. இவன் புலவர்க்குப் புள்ளிமான்; பகைவர்க்கு அரிமான். தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன் என்று இவன் பாராட்டப் பெறுவான்.

சேரன் தளைப்படல்: மாந்தரஞ் சேர லிரும்பொறைக்கும் நெடுஞ்செழியனுக்கும் ஒரு காலத்தில் பெரும் போர் மூண்டது. மாந்தரஞ் சேர லிரும்பொறை மனச்சோர்வு கொள்ளவில்லை. ஆற்றலோடு போரிட்டான். போரின் முடிவில் எக்

காரணத்தாலோ மாந்தரஞ் சேரல் என்னும் வேழம் பாண்டியன் கையில் அகப்பட்டுக்கொண்டது.

பகைவர் அச்சம்: மாந்தரஞ் சேரல் முன்பு சில சிற்றரசர்களின் நாடுகளைக் கைப்பற்றி இருந்தான். அவன் செழியனல் சிறைப்பட்டிருந்த காலத்தும் அப் பகைவர் அந் நாடுகளை மீட்டுக்கொள்ள அஞ்சினர். அவன் எங்ஙனமேனும் வெளிவருதல் கூடும்; வந்தால் உள்ளதும் போய்விடும். அவன் இல்லாத இப்பொழுதும் அவனது மனம் மகிழும்படி நடந்துகொண்டால் அவன் கைப்பற்றிய நம் நாடுகளையும் அணிகலன்களையும் திரும்பக் கொடுத்துவிடுவான் என்று எண்ணினர்.

நாட்டை அடைதல்: மாந்தரஞ் சேர லிரும்பொறையின் உள்ளம் கொதித்துக்கொண்டே இருந்தது. 'எத்தனை நாளைக்கு இந்த இழிந்த சிறை வாழ்க்கை! வாழ்ந்தால் முன்போல் மன்னனாக வாழ வேண்டும்! இல்லையேல் இந்தச் செழியனின் செங்கணைக்கு விருந்தாக வேண்டும்!' என்று உறுதி கொண்டான்; சிறைக் கதவுகளை உதைத்தும் குத்தியும் உடைத்தெறிந்தான். சிறைக் கோட்டக் காவலாளிகள் அவனைத் தாக்கினர். மாந்தரஞ் சேர லிரும்பொறை அவர்கள் வைத்திருந்த ஆயுதங்களைப் பிடுங்கி அவற்றால் அவர்களைக் கொன்றான். கொன்று அங்கிருந்த குதிரை மேலேறித் தன் நாட்டை யடைந்தான்.

'யானை பிடிக்கும் குழிமேல் பரப்பிய பாவினை, தன் மனச்செருக்காற் பாதுகாவாது அக் குழியில் விழுந்த கொல்யானை, அக் குழியைத் தூர்த்துத் தன் சுற்றத்தோடு சேர்ந்ததுபோல்,

மாந்தரஞ் சேர லிரும்பொறை தன் சுற்றத்தாரை யடைந்தான' என்று குறுங்கோழியூர் கிழார் ஒப்பற்ற உவமையால் அதனை நமக்கு விளக்கிக் காட்டுகிறார்.

விளங்கில் போர்

விளங்கில் என்பது ஒரு வளநகர். அது கடவன் என்பவனுக்கு உரியது. அதைப் பகைவர் தாக்கி அழித்தனர். அதனால் அந் நகர மக்கள் செல்லுமிடம் தெரியாமல் திகைத்துக் கண்ணீர் விட்டுக் கலங்கினர். மாந்தரஞ் சேரல் நால்வகைப் படைகளோடு அங்கே சென்று பகைவர்களைக் கொன்று அந் நகரைக் காத்தான். அந் நகர மக்கள் கண் மாரி நீங்கி மலர் மாரி பொழிந்து மாந்தரனைப் போற்றினர்: 'அயிரை மலைபோலும், பெரியாறு போலும் வாழ்க' என்று அவனை வாழ்த்தினர்.

தமிழார்வம்

ஐங்குறுநூறு: ஐங்குறுநூறு என்பது அறிஞர் புகழும் எட்டுத் தொகை நூல்களுள் ஒன்று. அது ஐந்நூறு அரிய பாடல்களை யுடையது. அந்த ஐந்நூறு மணிகளையும் ஒரு நூலில் கோக்கு (ஒரு நூலாகத் தொகுக்கு) மாறு புலத்துறை முற்றிய கூடலூர் கிழாரை மாந்தரஞ் சேரல் கேட்டுக்கொண்டான். அவரும் அவ்வாறே செய்தார்.

புலவர்களைப் போற்றினன்: 'பல பொருள் பொதிந்து கிடக்கும் செய்யுளியற்றுகின்ற செவ்விய நாவினையும் மிக்க கேள்வியையும் உடைய, விளங்கு புகழ்க் கபிலன் இன்றிருப்பானாயின் நன்று. அது

பெற்றிலேன்' என்று யானைக் கட்சேய் மாந்தரன் கூறினன். அவன் கபிலரிடத்துக் கொண்ட நட்பின் ஆழத்தை என்னென் றுரைப்பது! அவன் தமிழ்மீது கொண்ட அன்புதான் கபிலரை நண்பராகப் பிணித்திருக்கும். கபிலரும் அவனை நண்பனுகக் கொண்டிருக்கக்கூடும். அவன் குறுங்கோழியூர் கிழார், பொருந்தில் இளங்கீரனுர் முதலிய பண்பட்ட பாவலர்களைப் பாதுகாத்தான். அவர்களாற் பல செய்யுட் கதிர்கள் தோன்றித் தமிழுலகில் ஒளி வீசுகின்றன.

12. கணைக்கா லிரும்பொறை

மானம்

நம் தமிழ் மன்னர் பலர் உயர்நிலையில் நின்று கண்ணை இமை காப்பதுபோல் உலகினைக் காத்தனர். தாழ நேர்ந்தபோது பல மன்னர் உயிர் துறந்தனர். மானமே அவர்களது அருங்கலமாகும். கவரிமான் என்பது மான்களில் ஒரு வகை. அது தன் மயிர்த்திரளில் ஒன்று நீங்கினும் உயிர் துறக்கும். தங்கள் பெருமையில் ஒன்று நீங்கினும் உயிர் வாழார் உயர்ந்த பண்புடையோர். 'நெறிமுறை தவறு அரசர்க்கு மானத்தின் மிக்க அறனும் பொருளும் இன்பமு மில்லை' என்று சான்றோர் கூறினர். மானம் என்பது தன்னிலையில் தாழாமையும் தாழ்வு வந்திடில் உயிர் வாழாமையுமாம். மானத்தால் மன்னுயிர் விட்டுப் புகழ் நாட்டிய மன்னனைப்பற்றிய வரலாறு இதுவாகும்.

செந்தமிழ் வளர்ந்த சேரநாட்டில் தொண்டி என்னும் துறைமுகப்பட்டினத்தைத் தலைநகராகக் கொண்டு கணைக்கா லிரும்பொறை நல்லாட்சி புரிந்தான். அவன் மானத்தின் மணி; வீரத்தின் ஒளி. தமிழ்ப் பயிர் வளர்த்த பாவலர், பாணர், கூத்தர் முதலோரைப் பாதுகாத்தான். செய்யுளியற்றும் புலமையும் பெற்றிருந்தான்; பொய்கையாரென்னும் புலவர் மணியைத் தன் அவைக்களத்தின் விளக்காகக் கொண்டான்.

மூவனோடு போர்

மூவன் என்பான் ஒரு கொடையாளி; சிற்றரசனாயும் திகழ்ந்தான். அவனது நாடு கடற்கரையை அடுத்து வளமுற்றிருந்தது. பெரும் புலவராம் பெருந்தலைச் சாத்தனார் பாடத்தக்க புகழ் பெற்றிருந்தான்.

கணைக்கா லிரும்பொறைக்கும் மூவனுக்கும் போர் மூண்டது. மூவனென்பான் சிற்றரசனாயினும் கணைக்கா லிரும்பொறைக்கு ஒப்பப் படைகளை வைத்திருந்தான். கோடையிடிபோல் இரு படைகளும் குமுறின; சோனை மழைபோல் அம்புகளைச் சொரிந்தனர். கணைக்கா லிரும்பொறை மூவன் உடலைச் சல்லடைக் கண்களாகத் துளைத்தான். அதனைக் கண்டு மூவன் படைகள் மூலைக்கொன்றாக ஓடின.

கணைக்கா லிரும்பொறை மூவனது வாயிலிருந்த முப்பத்திரண்டு பற்களையும் பிடுங்கித் தன் தொண்டி நகரத்திற்குக் கொண்டு சென்றான். பொன்னில் முத்துக்களைப் பதித்ததுபோல் மூவனது பற்களை அகன்றுயர்ந்த தன் கோட்டைக் கதவில் பதித்தான்; மகிழ்ந்தான்.

சிறைப்படல்

கோச் செங்கணான்: கோச் செங்கணான் என்ற சோழ மன்னன் சிறந்த சிவபக்தன். முதல் முதல் சிவபெருமானுக்குக் கோயில்கட்டி வழிபடத் தொடங்கியவன்; அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவன்; மறந்தும் புறந்தொழா வைணவரிற் சிறந்த திருமங்கை ஆழ்வாரால் பாராட்டப் பெற்ற

பண்புடையவன். கோச் செங்கட் சோழன் என்றும் அவனைக் கூறுவர். அவன் உறையூரிலிருந்து ஆட்சி புரிந்தான்.

படைத்தலைவர்கள் போர்: நன்னன், அத்தி கங்கன்கட்டி முதலானவர்கள் கணைக்கா லிரும் பொறையின் படைத் தலைவர்கள். பழையன் என்போன் கோச்செங்கணனின் படைத்தலைவன். இவர்களுக்குள் கழுமலம் என்னும் ஊரில் போர் நடந்தது. கழுமலம் என்பது சேர நாட்டில் உள்ள ஓரூர். அப் போரில் இரும்பொறையோ சோழனோ முதலில் கலந்துகொள்ளவில்லை. இரு படைத் தலை வர்களுக்குந்தான் போர் நடந்தது. அப் போரில் நன்னன் என்பவன் பழையன் என்பவனைக் கொன்றான்.

மன்னர் போர்: பழையன் பட்ட செய்தியை ஒற்றர் ஓடோடிச் சென்று சோழனுக்குக் கூறினர். சோழன் கொதித்தெழுந்து போர்க்கள மடைந்தான். மதயானை மடுவினைக் கலக்குவது போல் நன்னனது படைக் கடலைச் சோழன் செங்கணான் கலக்கினான். நன்னனும் வீரத்தோடு போர் புரிந்தான். முடிவில் சோழன் அவனைக் கொன்றான்.

அதனைக் கணைக்கா லிரும்பொறை கேட்டுக் கலங்கினான். ஆயினும் பழிக்குப் பழி வாங்கவேண் டும் என்று படைகளைத் திரட்டிக்கொண்டு போர்க்கள மடைந்தான். போர் மிகக் கடுமையாக நடந்தது. இருவருக்கும் வெற்றியும் தோல்வியும் சக்கரம்போல் சுழன்றன. கணைக்கா லிரும்பொறை களைத்தான். 'களைத்தவர் மீது அம்பெய்தல்

கூடாது' என்று செங்கணான் அவனைக் கட்டிக் குடவாயிற் கோட்டத்துச் சிறை செய்தான். குடவாயிற் கோட்டம் என்பது உறையூரின்கண் சோழன் செங்கணானது அரண்மனையில் மேற்கு வாயிலிலுள்ள ஓர் இடம். அதனை வேறோர் ஊர் என்று கூறுவாருமுளர். அந்த இடத்தில் சேரனைச் சிறை வைக்காமல் சிறைக் கூடத்திலா சிறை வைப்பான், உயர்குடிப் பிறந்த சோழன்? சேரனும் முடி மன்னன் அல்லனா? பாம்பறியும் பாம்பின் கால்.

சிறையைச் செந்தமிழ் திறந்தது

தீத்துயர்: கணைக்கா லிரும்பொறை சிறைச் சாலையில் அடைக்கப்பட்டதும் அவனது உள்ளம் சுழன்றது. அவனது உடல் மட்டும் புண்பட்டிருந் தால் மிக மகிழ்ந்திருப்பான்; அவனது உள்ளமும் புண்பட்டது; உடலும் சிறைப்பட்டது. இந்த நிலையில் யார்தாம் கலங்காதிருப்பர். வேல்வேந் தர்க்கு முதுகு கொடுத்து ஓடாத மன்னன் நில மகளுக்கு முதுகு கொடுத்துக் கிடந்தான். தன் மார்பிலும் முகத்திலும் பட்ட புண்களைத் தன்னைப் பாதுகாத்த நிலத் தாய் கண்டால் கலங்குவாள் என்று கருதினன்போலும், கணைக்கா லிரும் பொறை.

"தண்ணீர்! தண்ணீர்!" : கணைக்கா லிரும் பொறை கடும் வெயிலில் பெரும் போர் செய்த தாலும், கணக்கற்ற விழுப்புண்களைப் பெற்றதாலும் சிறையில் பெருங் களைப்புற்றான். நெருப்பில்லாமலே அவனது உடல் எரிந்தது.

இங்ஙனம் சில நாள் கழிந்தன. ஒரு நாள் அவனது நாக்கு வறண்டு உள் ளிழுத்துக்கொண்டது. அதனுல் செந்நீ ரொழுகும் அவனது உடல் தண்ணீர் கேட்டது. மானம் சுரந்துகொண்டிருக்கும் அவனது மனம் தண்ணீர் கேட்க மறுத்தது. உணர்வற்ற நிலையில் அவனது வாய் சிறைக்கோட்டக் காவலாளியைத் தண்ணீர் கேட்டது. உயிரா பெரிது!

சிறைக்கோட்டக் காவலாளிகள் முதலில் பராமுகமாக இருந்து சிறிது நேரஞ் சென்று தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தனர். மனமின்றிக் கொடுத்த வரியையும் வாங்காத மன்னன் அன்பின்றிக் கொடுத்த தண்ணீரை வாங்கினுன். வாங்கி அதைப் பார்த்துச் சிரித்து, 'அன்பின்றிப் பகைவர் கொடுத்த தண்ணீரை உண்டு உயிர் வாழ்வதா உயர்வு!' என்று உருகிய உருக்கம் ஒரு பாடலாகப் பெருமூச்சோடு வெளி வந்தது. அதன் பொருள் கீழ் வருமாறு:

'ஒரு பிள்ளை தாயின் வயிற்றிலேயே இறந்து பிறந்தபோதிலும், மாமிசப் பிண்டமாகப் பிறப்பினும் ஆளல்லவென்று கருதாமல் வாளால் வெட்டுண்ணுதலைத் தவருர் சேரர் குடியினர். பகைவரின் வாளாற் படாமல் சங்கிலியாற் பிணிக்கப்பட்ட நாய்போலக் கட்டித் துன்பத்தைச் செய்து சிறைவைத்த பகைவருடைய சுற்றத்தாரின் உபகாரத்தால் வந்த தண்ணீரை இரந்துண்ணக் கடவேம் அல்லேம் என்னும் மன வலிமை இல்லாமல் வயிற்றின்கண் எழுந்த தாகத் தீயை ஆற்ற வேண்டுமென்று தாமாக இரந்துண்ணுவோரைச் சேரர் குடிமன்னர் பெறுவார்களோ!' என்று

கணைக்கா லிரும்பொறை கூறி அந்த நீரை அருந் தாமல் மூர்ச்சித்தான். மானமுள்ள மக்க ளியல்பு அதுதான்.

இருளில் நிலவு: இரும்பொறை அருஞ் சிறைப் பட்டதைப் பொய்கையார் அறிந்தார்; துடித்தார்; கதறினார்; புரண்டார். சிறிது அமைதி பெற்றது அவரது உள்ளம். 'சென்றதைப்பற்றி ஏன் சிந்திக்க வேண்டும்? ஆவதைப்பற்றித்தான் ஆராயவேண்டும்' என்ற முடிவிற்கு வந்தார். அதனைப்பற்றி அவரது உள்ளம் விரைந்து சென்றது. கோடையால் வாடியவன் குளிர் பொய்கையைக் கண்டதுபோல் ஒன்றினை உன்னினார்; கோச் செங்கணானிடம் சென்றார்.

களவழி நாற்பது: கோச் செங்கணான் அவரை விரைந்து வரவேற்று இருக்கை அளித் தான். அளித்து, "உம்து வருகையின் காரணம் அறிய என்னுள்ளம் விழைகின்றது" என்றான். "வெற்றி பெற்ற அரசே, உனது கழுமலப் போரைச் சிறப்பித்துக் 'களவழி நாற்பது' என்னும் நூலொன்று இயற்றியுள்ளேன்" என்று பொய்கையார் கூறினார். "அதனைக் கூறுவீராயின் கேட்டு மகிழ்வேன்" என்றான் மன்னன். அந் நாற்பது செய்யுட்களையும் பொய்கையார் புகன்றார். அரசன் அந் நூலைக் கேட்டு, "உமது நூல் முழுவதும் அழகான வருணனை; இன்பத்தி லாழ்த்தும் இயல் புடையது. இந்த அரசினைப் பரிசாகக் கொடுப் பினும் அதற்கு ஈடாகாது என்றால் வேறு எந்த அரசினைக் கொடுப்பது? மேலும் நான் கொடுக்க விரும்பும் அரசு அழியும். உமது அருந் தமிழ்ப் பாடல் கள் என்றும் அழியா" என்றான்.

"என் அரசினைப் பரிசாகக் கொடுத்து அழியாப் புகழை அடையலாம்."

"ஒன்றும் விளங்கவில்லையே!"

"நீ சிறையில் வைத்திருக்கும் என் அரசாகிய கணைக்கா லிரும்பொறைதான் அந் நூலுக்குப் பரிசு."

"மிகவும் மகிழ்ச்சி, உங்கள் விருப்பப்படி அவரை விடுதலை செய்கிறேன்: வாருங்கள் குடவாயிற்கோட்டம் செல்லலாம்."

இருவரும் அங்கே சென்றனர். கணைக்கா லிரும்பொறை மூர்ச்சித்துக் கிடந்த காலமும் அவர்கள் சென்ற காலமும் ஒத்துக்கொண்டன. அதனால் உள்ளே சென்ற இருவரும் திடுக்கிட்டனர். சோழன், இரும்பொறையைத் தூக்கி உட்கார வைத்து வாயில் தண்ணீரைச் சிறுக ஊற்றினான். சேரன் உணர்ச்சி பெற்றான். சோழன் சேரனைக் கட்டித் தழுவித் தான் செய்த துன்பத்தை மறக்கச் சொல்லி அவனை விடுதலை செய்தான். புலவர் மகிழ்ந்தார்.

13. நாகரிகம்

[கீழே காணப்படும் சேரர் காலத்திய அரசியல், போர் முறை, நாகரிகம் முதலானவை பதிற்றுப் பத்திற் கண்டவை. அவை உள்ளத்தில் உணர்ச்சி யையும் இன்பத்தையும் உண்டாக்குவன.]

அமைச்சர், புரோகிதர், படைத்தலைவர், தூதுவர், சாரணர் என்னும் ஐம்பெருங் குழு வினரும், கரணத்தியலவர், கருமகாரர், கனகச் சுற்றம், கடைகாப்பாளர், நகர மாந்தர், நளி படைத் தலைவர், யானை வீரர், இவுளி மறவர் என் னும் எண்பே ராயத்தாரும் அரசிய லதிகாரிகள். அரசனுக்குச் சர்வாதிகாரம் இருந்தது. எனினும் மேற்கண்டவர்களின் ஆலோசனைப்படியே அரசன் அரசியலை நடத்தினன்.

அரசனுக்குத் திருமுக மெழுதுவோர்க்குக் கண் ணெழுத்தாளர் என்று பெயர்.

அரசன் போருக்குச் செல்லும்போதும் நியாயம் வழங்கும்போதும் அறஞ் செய்யும்போதும் முரசறைந்தனன். அவற்றை முறையே வீரமுரசு, நியாயமுரசு, தியாகமுரசு என்பர். போருக்குப் புறப்படும் முன் அரசன் வீரர்களுக்குப் பெருஞ்சோ றளித்தனன். அப்போதும் முரசு முழங்கிற்று. அரசன் தனது கட்டளையை வெளியிடும் காலத்தும் தனது மண நாளிலும் முரசறைந்தனன்.

'எம்மோடு போர் செய்ய வருவீரேல் உங்கள் காலி லணிந்துள்ள வீரக்கழலையும் உடலில் அணிந்

துள்ள போர் உடையையும் களைந்து இச் சிலம்பினையும் தழை உடையையும் அணிந்துகொள்ளுங்கள்' என்று பகைவரைப் பெண்பாலராக இகழ்வதற்கு அறிகுறியாகத் தம் கோட்டை வாயிலிற் சிலம்பினையும் தழை உடையினையும் முற்கால மன்னர் கட்டிவைத்தனர். அம் மதிலில் வாழும் வெற்றி மடந்தைக்கு அவற்றை அணி என்று கூறுவாரு முண்டு.

சிலம்பு என்பது பெண்கள் அணியும் ஒரு வகை அணி. தழை என்பது பெண்கள் உடுத்திய ஒரு வகை உடை விசேடம்.

சேரமன்னர், பனங்குருத்தினை நறுக்கி அழகாகச் செய்து வாகை மலர்களையும் கொன்றை மலர்களையும் அதனோடு சேர்த்துக் கட்டி அணிந்தனர். தனியாகவும் பனையின் வெண் குருத்தினை அழகாகச் செய்து அவர்கள் மாலையாக அணிந்தனர்.

போர் முறை: போர்வீரர் பாசறையில் தங்கியிருத்தலும் உண்டு. மழைக்காலமாக இருந்தால் காட்டிலுள்ள விறகுகளை முறித்துத் தீ மூட்டிக் குளிர்காய்வது வழக்கம். பல மொழிகள் பேசும் வீரர் பாசறையில் இருந்தனர்.

வீரர்கள் தாம் பெற்ற வெற்றியைக் கழலில் பொறித்துத் தம் காலிற் கட்டிக்கொண்டனர்.

மீன்கொத்திக் குருவி கயத்தில் மூழ்கி எழும்பும்போது அதன் அலகு விரிந்திருப்பது போன்ற புண்களை நீண்ட வெள்ளூசியால் இழைகொண்டு தைத்தனர்.

அரசர் பாசறையில் இருக்குங்கால் பகைவரை வெல்வதற்கு இரவெல்லாம் யோசித்தனர்.

தேர்ப் படை, யானைப் படை, குதிரைப்படை, காலாட் படைகளோடு கடற்படையும் சேரர்க்கு இருந்தது.

தோற்ற அரசரை வென்ற அரசர் பின் கட்டாகக் கட்டித் தலையில் நெய்யைப் பெய்வது அக் கால வழக்கம். பகைவர் நாட்டிலுள்ள பொருள்களைக் கொண்டு சென்று தம் நாட்டிலுள்ள இரவலர்க்குக் கொடுத்தனர். தோற்ற மன்னர்களின் காவல் மரங்களை வெட்டி முரசு செய்தனர். காவல்மரங்களைத் துண்டங்களாக்கிப் பகைவர்களுடைய தேவிமாரின் கூந்தல்களைக் கயிறுகளாகத் திரித்து, அத் துண்டங்களில் கட்டிப் பகைவரின் யானைகளையே அவற்றிற் பூட்டி இழுக்கச் செய்தனர்.

முற்காலத்தரசர் புலால் நாறும் வாள்களுக்குப் புலித்தோல் உறை இட்டு வைத்திருந்தனர்.

முற்றிய செந்தினையை இரத்தத்துடன் கலந்து போர்த் தேவதைகளுக்குப் பலியாகத் தூவினர்.

நாகரிகம்: முற்காலத்தில் பாண்டில் விளக்கென்று ஒரு வகை விளக்கு இருந்தது. அது உள் பருத்துக் குழாய் ஒன்றை உடையதா யிருந்தது. விளக்கில் நெய்விட்டுக் குழாயில் திரி இட்டு எரித்தனர். அது பேரொளியைத் தந்தது. அவ் வொளியில் விறலியர் ஆடினர்.

ஆட்டுக் கிடாக்களைச் சண்டை இடச் செய்து மகிழ்ந்து முற்காலத்தவர் பொழுதுபோக்கினர்.

முற்கால உழவர்கள், இக் கால உழவர்கள் போலவே நெல்லை மரக்காலால் அளந்து பைகளில் இட்டு மூட்டையாகக் கட்டினர்.

ஒள்ளிய அணிகலன்கள் அணிந்த மகளிர் வீரக் கழல் அணிந்த வீரர்களோடு கடற்கரைக்கு உலாவச் சென்றனர்.

தாம் மேற்கொண்ட செயல்களில் வெற்றி பெற விடியற்காலையில் அதைப்பற்றி முற்காலத் தவர் நினைந்தனர்.

செல்வர்கள் வேனிற் காலத்தில் வீட்டிலிராமல் குளிர் சோலைகளில் தங்கி இன்பந் துய்த்தனர்.

இறந்தவர்களைத் தாழியிலிட்டு மண்ணிற்குள் புதைத்தனர். தாழி, மண்ணாற் செய்து சுடப்பட்ட பெரிய பாண்டம்.

தலைவன் தலைவியைப் பிரிந்து நீண்ட நாள் வராம விருப்பின், அவன் வராமற் கழித்த நாட் களைத் தலைவி, சுவரில் நகத்தால் கீறிக் குறித்து வைத்தாள்.

முற்கால மன்னரும் மற்றுமுள்ளோர்களும் கோயில்கள் கட்டி அவற்றிற்கு அணிகலன்களை அதிகமாகக் கொடுத்தனர். திருமால், கொற்றவை, கடவுட் பத்தினி (கண்ணகி), அருந்ததி முதலிய தெய்வங்களை வணங்கினர்.

வரம் பெற 'விரும்பினோர் திருமாலின் திருக் கோயிலில் உண்ணா நோன்பை மேற்கொண்டனர்.

வெல்லத்திேனாடு அவரைப் பருப்பினைச் சேர்த் துப் பண்டையோர் உண்டனர். ஆட்டிறைச்சி கலந்த சோற்றை உண்டனர்.

அறுவடை செய்யும்போது உழவர்கள் விழாக் கொண்டாடிக் களித்தனர்.

தீர்த்தமாடுவோர் வருவதற்கு மணி அடிப்பது வழக்கம். அவ் வோசையைக் கேட்டு, 'இதுதான் நல்ல வேளை' என்று நீராடச் சென்றனர்.

முற்காலத்தவர் காற்றூடி விட்டுக் களித்தனர். அதிலிருந்து ஓர் ஓசை உண்டாயிற்று.

பெண்களும் ஆண்களும் நீரிற் பாய்ந்து நீந்தி விளையாடினர்.

கரும்பினல் தெப்பஞ் செய்து ஆற்று நீரில் விட்டுக் களித்தனர்.

